# திராவிடநாடு

| 14—9—58 | வார வெளியீடு | விலை 16 காசு |
| --- | --- | --- |


## வெல்வோம்

—[ மான் ]—

திரத்தான் வேண்டும் இனி இரண்டிலொன்று
    திராவிடம் பிரியத்தான் வேண்டும் என்ற
கோரிக்கை இங்குள்ள ஏழெட்டுப்
    பேர் முன் அல்ல, டெல்லிப் பெரியவர்கள் முன்!
ஊராள்வோர் இதை உணர வேண்டும் டெல்லிப்
    பெரியவர்கட் கெடுத்தோத வேண்டும் புரட்சிப்
பேரேடு விரிகிறது தி. மு. க. புதிய
    அத்தியாயம் வரைகிறது தெற்கே என்று!

"பிரிவினையால் சிறிதாகும் நாடு மக்கள்
    பலம் குன்றிப் போகும்" என்று பேசுகின்ற
பெரியோரைக் கேட்கின்றேன் 'ஐயாவே நீர்
    வரலாறு அறியீரோ வளர்ந்து வரும்
சரித்திரமும் புரியாதோ" பரப்பளவில்
    உலகப் படத்தினிலே சிறிதாகத்
தெரிகின்ற நாட்டையெல்லாம் பருந்து வந்தா
    கொத்திற்று? போர்க்கரடி வந்து விழுங்கிற்று?

சின்னஞ் சிறு நாடு 'லக்சம்பர்க்'
    தனியாட்சிக் கொடிகட்டி வாழும்போது
தென்னன் புகழ்ச்சோலை திராவிடம்
    மட்டுமிங்கே தனித்திருந்தால் வாழாதோ?
வரலாறு தரும்பாடம் உரமேற்றும்
    தோள்களுக்கு. வளர்வோம், திராவிடம்
பிரிந்தே தீரும் அந்தத் திருநாளை
    எதிர்நோக்கிச் செல்வோம் வெல்வோம்.

# பொன்முடி புகட்டும் பாடம்

[இரே. தென்னவமணி]

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக்கடன்;
வேல் வடித் துக்கொடுத்தல்
கொல்லர்க்குக்கடன்;
நன்னடை நல்கல் வேந்தர்க்குக்கடன்;
ஒளிறு வாள் அருஞ் சமமு நுக்கி
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே"

இப்பாடலைப் பாடிய பொன் முடியார், தான் ஒரு பெண் புலவர் என்பதை முதலடியில் எடுத்துக் காட்டுகிறார். மேலும் நாட்டினரின் கடமையையும் ஆள்வோரின் கடமையையும் நன்கு விளக்கிக் கூறியுள்ளார்.

ஈன்ற மகவை குணநலனோடு குறையின்றிக் காத்தல் தாயின் கடமை; மகனை மற்றவர் போற்றும் மதிபடைத்தோனாக்குதல் தந்தையின் கடமை; நாட்டு நலனில் பொறுப்புக்கொண்டு நாட்டைக் காத்திடத் தேவையான கருவிகளைச்செய்து கொடுத்தல் தொழிலாளியின் கடமை; நல்ல வழியில் மக்களை அழைத்துச் செல்லுதல் நாட்டுத் தலைவனின் கடமை; தாயகத்துச் செல்வங்கள் கொள்ளை போகாமல் பகைவருடன் போரிட்டு நாட்டைக் காத்தல் காளையரின் கடமையென எடுத்துக் காட்டுகிறார்.

இப்பாடலைப்படித்து நம் நாட்டையும் நோக்கினால் தேற்றுவாரற்றுத்தேம்பி அழும் நிலைதான் ஏற்படும். பெற்ற குழந்தையை எண்ணிப் பெருமைப்பட வேண்டிய தாய்க்குலம் தம் குழந்தைகளை விற்றிடும் குரல்தான் கேட்கும். தன குழந்தையைக் காத்திடல் கடமையென்றறிந்தும் குளத்திலும், ஆற்றிலும போட்டுக் கொன்றிடும பரிதாபமான காட்சிதான் கண்ணெதிரே தெரியும்.

ஏன் இந்த நிலை? என்ற வினாவை எழுப்பி விடைகாண முயன்றால், வறுமையின வெம்மையைத் தாங்க இயலாததால் ஏற்பட்ட கொடுமைகள் என்பது நன்கு விளங்கும்.

'மகனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடமை' என்பதை அனைவரும் அறிவர். ஆனால் மகனை உயிரோடு வளர்த்தால் போதும் என்ற மனநிலை தந்தைக்கு ஏற்படுகிறது. கதிரவன் உதிப்பதற்கு முன் வேலைக்குச் சென்று களைப்போடு இருள் கவ்விய பிறகே வீடு திரும்புகிறான். நாள் முழுதும் உழைத்தும் கிடைக்கும் பற்றுக் கஞ்சியை நினைத்து விழியைக் குளமாக்குகிறானே தவிர, மகனின் கல்விக்கு வழிகாண இயலாதவனாகிறான்.

இதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால், மேல் நாடுகளைப்போல உழைப்புக் கேற்த ஊதியமும், சம உரிமையும் சலுகைகளும் சரிவர வழங்கப் படாததே என்பது புலனாகும். தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்திருக்கிறோம் என்று அரசு மார்தட்டிப் பேசலாம். அதற்கு உதாரணங்கள் வடநாட்டிலே காட்ட முடியும். ஆனால் தென்னாட்டிலே காட்ட முடியாது.

நாட்டின் நலனுக்குத் தொழிலாளர்களின் துணை அவசியம். ஆனால் சாதாரண தொழிலாளியின் தனிப்பட்ட பொருளாதார நிலை சீர்ப்பட்டாலொழிய நாட்டின் பால் பொறுப்பேற்படுவது இயலாது. வேலையில்லாத் திண்டாட்டத்திலும், பணமுதலைகளின் பிடியிலும், துப்பாக்கிக் குண்டிலும் சிக்கிப் பலியாகும் அவனுக்கு, நாட்டின் நலனை அறிய ஆவல் ஏற்பட முடியாது.

'மக்களை நல்ல வழியில் அழைத்துச் செல்லுதல் நாட்டுத் தலைவனின் கடமை.' இந்த அரிய கருத்தை அறிந்தும் அறியாதவர்களாய் ஆளவோர் இருக்கின்றனர் என்று நமமால் சான்றுகாட்ட முடியும். நல்வழிப்படுத்தும ஆற்றலும, ஆசையும் இருந்திருந்தால் சாதி வெறியில் சாக்காடாகும் முதுகுளங்கள தோன்றாது.

இதை ஒழிக்க வேண்டுமானால் பசி பட்டினி, வறுமை நீங்கவேண்டும. நாட்டின் பொருளாதாரநிலை போதுமானதாக வேண்டும். பொருளாதாரம் பற்றி நாம பேசினால் "இவர்களுக்கு பொருளாதாரம் தெரியுமா?" என்று ஆள்வோரும் மற்றவர்களும் கேட்கக் கூடும். இத்தகைய பொறுப்பற்ற பேச்சுகளுக்கு நாம் செவி சாய்ப்பவர்களுமல்ல. நாம் கூறுகிறோம் என்பதற்காக மாற்றார் மறுத்தாலும் உண்மையை மறைக்கமுடியாது. தீய சக்திகளுக்கு இடமளித்துவிட்டு, 'திருந்துங்கள்' என்று கூறுவது 'பாம்புக்கு பால் வார்த்துவிட்டு பாம்பு கடிக்கு மருந்து தயாரித்துத் தருகிறோம்' என்று பெருமைப்படுவது போலாகும்.

தன்நாடு, மொழி, பண்பாடு, செல்வம் இவை பகைவரால் பாழ்படும் என அறிந்தால் வாளெடுத்துப் போரிட்டு அவற்றைக் காத்தல் காளையரின் கடமையென ஈற்றடியில் கூறுகிறார். அன்று வாளைக்காட்டி நாட்டைக்காக்க வேண்டியநிலை. இன்று, கொள்கையை விளக்கி ஆதாரங்களைக் காட்டி தாயகத்திற்குத்தற்காப்புத் தேடவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதனால்தான் இப்பணியை நாம் செவ்வனே செய்து வருகிறோம்.

அலைகடலும் அதிலே முத்தும், வளம்கொழிக்கும் வயல்களும், மண்ணடியில் பொன், வைரம், நிலக்கரி, எண்ணெய் போன்ற பொருள்களும், பசுமையான காடுகளும், அவற்றில் வேறெங்கும் காணாத அகிலும் தேக்கும், மிளகு ஏலம், கிராம்பு போன்ற வாசனைப் பொருள்களும் வழங்கும் வற்றாத தென்னகம் தேய்வதையும், வடநாடு வளர்வதையும் காணும் போது, நாட்டுப் பற்றுடையவர்கள் தாய்நாடு மாற்றாரின் பிடியிலிருந்து விடுபடல் வேண்டும் என்று கூறினால் 'தேசத் துரோகம்' என்று தெரிந்தவர்களும், சிந்திக்கும் மனம் படைத்தவர்களும கூற மறுப்பர்.

ஒரு மொழியின்மீது மற்றொரு மொழி ஆதிக்கம் செலுத்தினால் தன மொழிக்கு ஊறுபல நேரும என்பதை மொழி வல்லுநர்கள கூறியுள்ளனர். திராவிட மொழிகளைப் பற்றியும், அவற்றிற்கு

(13-ம் பக்கம் பார்க்க)

# அதிலும் அலட்சியமா?

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [14—9—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 9

இரண்டாவது உலகப் பெரும்போரின்போது ஆவடியில் ஒரு பெரிய தளம் அமைத்துப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்தத் தளத்தில் வேலை செய்யும் வகையில் பல ஆயிரக்கணக்கான பேருக்கு வாழ்வுக்கான வழி இடைத்துக்கொண்டிருந்தது. இராணுவ முறையிலும் ஒரு நாட்டின் படை ஒரே இடத்தில் குவிந்திருப்பதைவிடப் பல பகுதிகளிலும் பரவி இருப்பதே எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி என்று ஒப்புக்கொள்ளப்படும். அந்த வகையில் ஆவடியில் இருக்கும் தளம், இராணுவ முறையிலும், பொதுவாகவும் தென்னகத்திற்குப் பயன்பட்டு வந்தது.

இந்தியத் துணைக்கண்டம் தென்னகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையில் பார்த்து வருகின்ற காரணத்தினால், கூடுமானவரை தென்னகத்தின் நல்வாழ்வைக்கண்டு மனந் தாங்காமல் அழிவு வேலையில் ஈடுபட்டுவருவதை நாம் பலமுறை சான்றுகளோடு எடுத்துக்காட்டியுள்ளோம். இந்த 'தளம்' இங்கு இருப்பது காங்கிரஸ்காரர்களின் காருண்யத்தால் அன்று; ஆனால் 'இதையும் இங்கு விட்டுவைக்கவா' என்று எண்ணி இன்றைய தினம் அத்தளத்தை டெல்லிக்குப் பெயர்த்தெடுத்துக்கொண்டு போய் விடத்தீர்மானித்திருக்கின்றது மத்திய அரசாங்கம்.

இந்தமாற்றம் நிறைவேற்றப்படுவதற்கு டெல்லியில் கட்டிடங்கள் கட்டுவதற்கும் பல புதிய அமைப்பு வேலைகளை முடிப்பதற்கும் ரூ. 200 கோடி செலவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாம். வடக்கிலேயே மேலும் மேலும் வாழ்வு இருக்கவேண்டும் என்று எண்ணுவதினால் 200 கோடி ரூபாய் செலவு செய்தேனும் இந்தத் தளத்தைத் தங்கள் மண்ணுக்கு மாற்றிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டனர். ஆவடியில் உள்ள தளம் 80-கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டது ஆகும். இவர்களுக்கு உண்மையிலேயே இராணுவத்தைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், டெல்லியில் செலவு செய்ய இருக்கும் 200-கோடி ரூபாயையும் இங்கு ஏற்கனவே இருக்கும் தளத்தை விரிவாக்குவதிலோ, அல்லது புதிதாக்குவதிலோ செலவிடுதல் வேண்டும்.

ஆனால் இருக்கும் நிலையத்தை இடித்துவிட்டு இல்லாத இடத்தில் புதிய தளம் எழுப்ப முனைவதைப் பார்க்கும்போது, தென்னாட்டை எப்படியும் அழித்தே தீருவது என்று 'கங்கணம் கட்டிக்கொண்டு' அதே வேலையாக இருப்பதைக் காணுகின்றோம்.

இந்தத் தளத்தை மாற்றுதல் கூடாது என்று தனி நபர் தீர்மானம் ஒன்று 'சென்ற கிழமை சட்ட மன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானத்திற்கு சர்க்கார் தரப்பட்ட திருத்தம், ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

இப்போது நிறைவேறியுள்ள தீர்மானம், தளத்தை மாற்றினாலும், அந்த இடத்தில் தளவாட உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்துமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்தும்படி சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் முயற்சியாகும்.

சென்னை அரசாங்கம் சட்ட மன்றம் அளித்திருக்கும் இந்த ஒத்துழைப்பைப் பயன்படுத்திக்கொண்டு மத்திய சர்க்காரிடம் போராடி ஆவடியில் அழிவு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

முன்னே பலமுறை சட்டமன்றம் செய்த தீர்மானங்களை டெல்லி அரசாங்கம் மதிக்காமல் தென்னகத்தைப் புறக்கணித்திருக்கிறது. அப்போதெல்லாம் சென்னை மாநிலத்து அமைச்சரவை பொங்கி எழுந்து நியாயம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் நியாயத்தைவிட 'நிழல்' தரும் இனிமை இனிது என்றிருந்துவிட்டனர். இம்முறையேனும் வாளா இருந்துவிடாமல், நாட்டு நன்மைக்கான முறையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆவடியாவது காவடியாவது எங்கிருந்தால் என்ன என்ற 'அபேத உணர்ச்சி' வேண்டாம், வேண்டவே வேண்டாம்.

- எங்கிருந்தால் என்ன என்று இவர்கள் கருதுவதைப்போல் அங்கிருப்பவர்கள் ஏன் கருதவில்லை? டெல்லிக்கு எதற்காக அதைக் கொண்டுவர வேண்டும், ஆவடியிலேயே அந்தத் தளம் இருந்துவிட்டுப் போகட்டுமே என்று டெல்லி சர்க்கார் ஏன் எண்ணவில்லை?

அவர்களுக்கு இல்லாத 'அபேத உணர்ச்சி' இவர்களுக்கு மட்டும் ஏன் இருத்தல் வேண்டும்?

அவர்களுக்குத் தெரிகிறது வடநாடுதான் தங்கள் நாடு என்று. அதேபோல இவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் தென்னாடுதான் தங்கள்

நாடு என்பதனை. அந்த நல்ல நிலை மட்டும் ஏற்படு மானால், 'அதிலும் அலட்சியமா?' என்று உள்ளம் குமுறும் நிலை ஓரளவு நீங்கும்.

★

## "திடீரென!!"

பேச்சுரிமையை நிலைநாட்டுமுகத்தான் சென்னைக் கடற்கரைக் கரையில் போடப்பட்ட தடையுத்தரவை மீறச் சென்ற தி.மு.க. தலைவர்களையும் தோழர்களையும் பிடித்துச் சென்று, 'அடையாறு' லாக் அப்பில் வைத்து, வழக்கும் தொடர்ந்து, இரு கிழமைகள் தண்டனையும் பெறும்படி செய்தது சென்னை அரசு.

சென்ற கிழமை அதுகுறித்து நாம் எழுதிய எழுத்துக்கள் அச்சாகி முடிவதற்குள்ளாகவே, தண்டனை பெற்றோரை "திடீரென" அரசு, விடுவித்தது என்கிற சேதியை நாடு அறியும்! தடுப்பானேன் — தள்ளுவானேன் — வழக்குத் தொடர்வானேன்—வாதாடச் செய்வானேன்—சிறைக்குக் கொண்டுசெல்வானேன் — "திடீரென" விடுவிப்பானேன்—என்கிற கேள்விக் குறிகள், மக்கள் மன்றத்தில் எழாமலில்லை!!

காலக்கொலை எவ்வளவு என்பதோடு, அரசு ஏன் இவ்வளவு ஆர்வமும் அச்சுறுத்தலும் காட்டவேண்டும், பிறகு "திடீரென" ஞானோதயம் பெறவேண்டும் என்று ஒவ்வொரு சிந்தனையாளனும் எண்ணத்தான் செய்வர்.

விடுதலை இயக்கத்தினரின் குரலுக்கும், பேனாவுக்கும் தடைகளைப் போட்டால் என்ன கதியாகும்என்பது, சரித்திரத்தின் நீண்டதொரு வரலாறாகும். காங்கிரஸ் அரசு, இப்படித் தடைகளைப்போட்ட நேரத்திலெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் தம் உரிமைகளை நிலைநாட்ட, அறப்போர் நடாத்திடத்தவறியதுகிடையாது. அறிவார் காமராசர்; ஆயினும், தடை கிளம்பிற்று. தடியடி நடந்தது. வழக்குகள் பல உள்ளன, நமது தோழர்கள் மீது!!

பழிவாங்கும் வேகத்துடன்—தீர்த்துக்கட்டி விடுவோம் தி. மு. க.வை எனும் பெரும் எரிச்சலுடன் — அவிழ்த்துவிடப்பட்டன, அடக்கு முறைகள். தடைபோட்டால் — தடியடி செய்தால் — வழக்குகள் தொடர்ந்தால் — சிறைக் கதவுகளைத் திறந்து மூடினால்—மிரண்டு விடுவார்கள்! உரிமை முரசு, கிழிந்துபோய்விடும் என்று எண்ணிற்று அரசு!!

கடைசியில், "திடீர்" உத்தரவு பிறப்பித்து, விடுவிக்கும் கட்டத்துக்கு, அரசு வர நேர்ந்ததே ஒழிய, நியாயம் என்று கருதியதைப் பெறுவதற்காக எந்தத் தியாகத்துக்கும் தயாராக உள்ளோர் தம் கோட்டமே, தி. மு. க. என்கிற உண்மையை தடுத்து நிறுத்திவிட இயலவில்லை. எப்படி இயலும்? உண்மையின் நாடித்துடிப்பை நிறுத்தியதாகச் சரிதமே இல்லையே!!

★

# கனியும் கன்னியும்

—[அ. தங்கசாமி]—

மாலை நேரம் — இளந்தென்றல் மலர் மணம் சுமந்து, கருமுதிர்ந்த தாய்போல மெல்லென உலவி வந்தது. நடை கற்கும் பூங்கொடியென, கால்போன போக்கிலே போய்க்கொண்டிருந்தாள், தமிழ்ச்செல்வி.

நீண்ட நேரம் நடந்து எழில் தவழும் இளமரச் சோலையை அடைந்தாள். ஆம்! எழில் தவழும் சோலைதான் அது. ஓடும் மான்—உலவுந் தென்றல், பாடுங் குயில்—பளிங்கு நிறப் பாறைகளினூடே பாய்ந்து செல்லும், சலசலக்கும் தேனருவி. இவைமட்டுமல்ல, முருக்கவிழ் முல்லை மலர் ஒரு புறம்; சண்பகம்; இருவாட்சி மற்றோர் புறம். இத்தனைக்கும் மத்தியிலே தாமரைபூத்த தடாகம் வேறு. கேட்கவேண்டுமா எழிற்கு!

வண்டறைந்து, தேனுண்டு வரிக் குயில்கள் இசைபாட தண் தென்றல் இடைவிடாது தனியவரை முனிவுசெய்யும் பொழிலது. நடுவண் நின்ற அத்தலைவியின் மனம் மட்டும் எதிலும் செல்லவில்லை. நீண்ட சிந்தனையில் ஆழ்ந்துவிட்டிருந்தாள்.

உலகத்து எழிலெல்லாம் ஒருங்கே திரட்டியெடுத்து உருவாக்கப் பெற்றது போன்ற அவ்வழகி நின்ற நிலை......! வீதியிலே இப்பேதை நின்ற நிலையைப் பார்த்து கவிப்போதை ஏறப்பெற்றுத்தான், அந்த புலவன் பாடினனோ! என்னவோ! அவ்வளவு அருமையாக இருந்தது அந்தப் பாடல்.

கரிய குழலும்—பெரிய விழியும் —சிறிய இடையும் இணைந்து, அங்கமெல்லாம் தங்கமாக — மாகதச் சிலையென நின்ற அம்மங்கையின் முக அழகை எப்படிக் கூறுவது? பிறைமதியே நுதலாகவும், எட்சிப் பூவே நாசியாகவும் வெண் சங்கே கண்டமாகவும், அழகுற அமைந்திருந்தது அவள் உடலில்.

இளமைநலம் பூத்துக்குலுங்கும் அச்செல்விக்கு ஏற்பட்ட குறை ...! உண்ண உணவிற்கோ, அன்றி உடுக்க உடைக்கோ ஒரு குறையுமில்லை என்பதை, ஆழ்கடல் முத்து வேய்ந்த அரிய வேலைப் பாடுடன் கூடிய காற் சிலம்புகளே கழறிக்கொண்டிருந்தன.

இத்தனை வரிகளுக்கோர் சிறு புள்ளி வைத்தாள். தாமரைத் தடாகத்தில் கைகால் முகங்கழுவி, வீடுசெல்ல விழைந்தாள். பளிங்கு போன்றநீரில் இறங்கி; தன் மலர்க் கரம் இரண்டையும் சேர்த்து, மெதுவாக நீரைமொண்டு முகத்தருகே கொண்டுபோனாள்.

என்ன ஆச்சரியம்! கயலிரண்டு காணப்பட்டது அந்நீரில். உடனே

(13-ம் பக்கம் பார்க்க)

# இவர்கள் பேசினால்....!

## எஸ். ஏ. டாங்கே

ஒரு கல்லில் ஒரு மாங்காய் அடிப்பவன் சிறந்த திறமைசாலி என்று பெயரெடுக்கலாம்—சாதாரண வாழ்க்கையில்! ஆனால் அரசியலில் அப்படியல்லவே!

கல் ஒன்று, கீழேவிழுந்த மாங்காய்கள் ஒன்றுக்கு மேற்பட்டன என்ற பெயர்தான், அரசியல் வாதியின் திறமைக்கு அத்தாட்சி! இதை மனதில் வைத்துக் கொண்டுதான் நான் சொன்னேன் "கேரளத்தில் உள்ள இடது சாரிக் கட்சிகளெல்லாம் கம்யூனிஸ்டு அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்று! சொன்னேனா.... இல்லையில்லை...... அழைப்பு விடுத்தேன்.

நான் விடுத்த அழைப்பிலும் பொடி வைத்துத்தான் சொன்னேன்—எதிரிகளுக்கு இடம் கொடுத்துவிடவில்லை! ஏனென்றால் இராஜதந்திர முறைகளில் நான் எவருக்கும் தாழ்ந்தவனல்ல என்று உலகுக்கு நிரூபித்தாக வேண்டுமல்லவா?

இடதுசாரி எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்புத்தரவேண்டுமென்பதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். கம்யூனிஸ்டு அரசாங்கத்திற்கெதிராகக் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடத்தாமலிருப்பதும் ஒத்துழைப்புத்தான்—கூட்டு மந்திரிசபை அமைப்பதற்கு ஒத்துவருவதும் ஒத்துழைப்புத்தான்! இதில் எந்த ஒத்துழைப்பை நான் விரும்பினேன், தேவையென்று கூறினேன், என்று எவராலும் திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாதல்லவா?

> **செய்தி**
>
> இடது சாரிக் கட்சிகள், கேரளத்தில் கம்யூனிஸ்டு அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்று எஸ். ஏ. டாங்கே அவைகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கேரள முதலமைச்சரும், கேரளத்தில் கூட்டு மந்திரிசபை அமைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லையென்று டில்லியில் பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறினர்.

ஒத்துழைப்பைக் கோரிய விதத்திலே மட்டும்தான் என் இராஜதந்திரம் இருந்தது என்று பொருளல்ல! கோரிய ஒத்துழைப்புக் கிடைக்கப் பெற்றிருந்தால், அது இன்னமும் மகத்தான இராஜதந்திரமாக முடிந்திருக்கும்.

## M. S. வெங்கடாசலம், M. A.

இதையெல்லாம் யார் புரிந்து கொள்ளுகிறார்கள்? பொதுமக்கள் புரிந்துகொள்ள மாட்டார்களென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சியிலேயிருக்கிற அரசியல் வாதிகளிலேயே சிலர்— அதுவும் சிறந்த ஸ்தானங்களிலே இருப்பவர்கள் — இதைப் புரிந்து கொள்ளவில்லையே என்பது தான்!

சிலவற்றைப் புரியவைக்க முடியும்—மற்றும்சிலவற்றை உணர்த்தத்தான் முடியும். வெளிப்படையாகச் சொல்லிவிட முடியாது! அத்தகைய விஷயங்களிலே இதுவும் ஒன்று!

இன்று கேரளத்தில் எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் தங்களாலே என்னென்ன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம், அவை நியாயம்தானா அல்லவா, ஜனநாயக விதிமுறைகளுக்கு உட்பட்டவையா அப்பாற்பட்டவையா, மனிதாபிமானத்திற்குப்பொருந்துவனவா பொருந்ாதனவா, என்பதைக்கூடச் சிந்திக்காமல் செய்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் கேரள அரசாங்கம் கையாள வேண்டிய இராஜ தந்திரம் மிகச் சாதாரணமானதல்ல! ஒரே கல்லாலே பல மாங்காய்களை அடித்தாகவேண்டும்! அதனாலே இடதுசாரிக் கட்சிகளுக்கெல்லாம் இத்தகைய தோர் அழைப்பை விடுத்தேன்.

சாம, பேத, தான, தண்டம் என்று எதிரிகளோடு நடந்து கொள்ளவேண்டிய வழிமுறைகளை வரிசைப்படுத்திக் கூறியிருக்கிறார் சாணக்கியர். சாணக்கியராவது இந்த முறைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் கையாளவேண்டு

மென்றார். நான் இரண்டாவது முறையையும், மூன்றாவது முறையையும் ஒரே சமயத்திலே கையாண்டிருக்கிறேன்!

"இடதுசாரிக் கட்சிகளே நீங்களெல்லாம் ஒத்துழைப்புத் தாருங்கள்" என்று நான் விடுத்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் காங்கிரசுக்கும் அவைகளுக்கும் இடையே மகத்தான பிளவு ஏற்பட்டிருக்கக்கூடும்— அவைகளுக்கிடையே ஒன்றையொன்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய சூழ்நிலைகூட ஏற்பட்டிருக்கக்கூடும்! இது பேத முறை!

அழைப்பு அந்தக் கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தக் கட்சிகளுக்கும், ஆட்சிக்கு வந்தாகவேண்டுமென்ற சபலபுத்தி மறைக்க முடியாத அளவு இருந்திருந்தால், அவை கம்யூனிஸ்டுக் கட்சியோடு பேரம்பேச, ஆட்சிப் பீடத்திலே ஒரு இடம் பெறமுயன்றிருக்கக் கூடும்! அப்படிப் பேரம் பேசியிருந்தும் அந்தப் பேரத்திற்கும், நானும், நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்டுக் கட்சியும் இணங்கியிருக்கக்கூடும்! எனவே இது தான முறை.

ஆட்சிப்பீடத்தில் அந்தக் கட்சிகளும் அமர்த்தப்பட்டால், காங்கிரசின் பலம் குறையும், கம்யூனிஸ்டு அரசாங்கத்தின் பலம் மிகும் என்பதுமட்டுமல்ல, இத்தகைய வழிமுறைகளை நான் கையாண்டதற்கான காரணம். அந்த வழிமுறைகளிலே மட்டும் கம்யூனிஸ்டுக்கட்சி வெற்றிபெற்றிருந்தால்-ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தாகவேண்டும் என்ற அளவு கடந்த ஆசையால்தான் அந்தக் கட்சிகள் எதிர்ப்பிரசாரம் செய்து வந்தன என்று உலகத்திற்கு வெகு எளிதிலே நிரூபித்திருக்க முடியும்!

ஆனால்...! அந்த வாய்ப்பு இப்போது நழுவிவிட்டது! கேரளத்தின முதலமைச்சர் நம்பூதிரிபாட்டும், கூட்டு மந்திரிசபை அமைத்திடத் தேவையில்லை என்று திட்டவட்டமாக டில்லியில் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் சொல்லிவிட்டார்!

அவர் இப்படிச் சொன்னது எவ்வளவு மகத்தான குற்றம்— ...கியல் அறியாமை — என்று என்னாலே புரிந்து கொள்ளமுடிகிறது! ஆனால் நாட்டு மக்கள் எவ்வளவுபேர் புரிந்துகொள்ளுகிறார்களோ, நானறியேன்!

"ஆட்சிப்பீடத்திலேஉங்களுக்கு இடமில்லை — ஆனாலும் நீங்கள் எங்களோடு ஒத்துழையுங்கள்" என்று சொல்வது எவ்வளவு மகத்தான தவறு! ஒத்துழைப்பு வேண்டுமென்று நாம் அழைப்பு விடுக்கும்போது, அத்தகைய ஒத்துழைப்பினால் நமக்கு என்னென்ன நன்மைகள் விளையக்கூடும் என்று அவைகளே கற்பனை செய்துகொண்டு மனப்பால் குடிக்கவேண்டிய அளவில் விட்டுவிடுவதுதான் இராஜ தந்திரம்! ஆனால்...! ஆனால்...! நம்பூதிரிபாட் திட்டவட்டமாகப் பேசி, அந்தக் கட்சிகளும் ஒத்துழைப்பைத் தர முடியாதென்று கூறிவிட்டன. இனி என்ன செய்ய இருக்கிறது?....உம்....நடக்கிறபடி நடக்கட்டும்.

## ஆசாரிய கிருபளானி

அழைப்பாம் அழைப்பு! இடதுசாரிக் கட்சிகளெல்லாம் ஒத்துழையுங்கள் என்று பொதுவாக அழைப்பு விடுப்பதற்குப் பதிலாக டாங்கே, பிரஜாசோஷியலிஸ்ட் கட்சி எங்களோடு சேர்ந்து பணியாற்றினால் நன்றாக இருக்கும், என்று கூறியிருந்தால்கூட ஓரளவு பெருமைப்பட்டிருப்பேன்!

அப்போதும் பெருமைப்பட்டிருப்பேனே தவிர, நிச்சயமாக அழைப்பைஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன்.

தாய்க்கல்லவா தெரியும் தன் பிள்ளையின் அருமை! அதைப் போல் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியின் அருமை பெருமைகள் அதன் நிறைவுகள் குறைகள், இத்தனையும் எனக்குத்தானே தெரியும்!

கட்சி என்பது அதற்கிருக்கின்ற எண்ணிறந்த தொண்டர்களாலும் ஆதரவாளர்களாலும மட்டுமே அமைவதல்ல! நல்ல தலைவர்கள் அதற்குக் கிடைத்தாக வேண்டும்! கட்சியை நடத்திச் செல்வதற்கு எனக்கிருக்கிற திறமையை, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஸ்தானத்தில் அமர்ந்துகொண்டு நான் புரிகின்ற பணியால் வெளிப்படும் ஆற்றலை இதுவரை எவரும் மறுத்ததில்லை என்று நினைக்கிறேன் — மாறாக அநேகர் புகழ்ந்திருக்கிறார்கள்.

இத்தகையதொரு நல்ல தலைவர் கிடைக்காததாலே தான் சோஷியலிஸ்ட் கட்சிக்குள்ளே பிளவுகளும் பூசல்களும் வலுத்து வருகின்றன. கட்சியே மெள்ளமெள்ள உடைபட்டு வருகிறது. நான் நடத்திச் செல்லுகிற பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியோடு சோஷியலிஸ்டு கட்சியையும் இணைத்தாக வேண்டும் என்று மனதார நம்புகிற பல தலைவர்கள் அதிலே இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு இணைப்பு ஏற்பட்டுவிட்டால் என்ன ஆகும்? பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி மேலும் வளர்ச்சி பெறும்—வலிவு அடையும்! ஆனால் சோஷியலிஸ்ட் கட்சியின் கதி? இப்படி ஒரு கட்சி இருந்தது என்று, பிற்காலத்தில் வரலாற்று ஆசிரியர்கள் எழுதித்தான் வருங்கால சந்ததிகளுக்குத் தெரிந்திட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்!

இந்த உண்மையினை நன்றாக உணர்ந்திருக்கின்ற நான், என் கட்சி கம்யூனிஸ்டுகளோடுசேர்ந்து பணியாற்றுவதை எப்படி விரும்புவேன்? இணங்கிப் பணியாற்றுவது வேறு — இணைந்துவிடுவதென்பது வேறு என்பதை நான் நன்றாக அறிவேன்!

ஆனாலும் இணைந்துவிடுவதிலே இருக்கின்ற ஆபத்து, இணங்கிப்

---

மனித வாழ்க்கையிலும் வசந்தம், கோடை, இலையுதிர்காலம், குளிர்காலம் ஆகிய நான்கு பருவங்கள் உண்டு. இந்த நான்கு பருவங்களும் மனதைச் சுற்றியே வளருகின்றன. வசந்தத்தில் மனிதன் இன்ப வெறியோடு எதையும் ருசி பார்க்கிறான். அழகின் ரசத்தை அள்ளிப் பருகுகின்றான்; கோடையில் வசந்தத்தில் கனிந்த பழங்களைத் தின்று இன்புறுகிறான்; இலையுதிர் காலத்தில் சிந்தனையில் ஆழ்ந்து, மௌனியாகி நிற்கின்றான்; பனி காலத்தில் மெய் சுருங்கி மனம் சுருங்கி மறைகிறான்.

பணியாற்றுவதிலேயும் இல்லாமல் போகவில்லை என்பதை இந்த நாட்டின் பத்து ஆண்டுக்கால வரலாறு எனக்குத் தெளிவாகக் காட்டி இருக்கிறது.

"சீக்கிய சிங்கம்" என்று பெயர் பெற்றிருக்கும் மாஸ்டர் தாராசிங், தேர்தல் காலத்தில் காங்கிரசோடு கைகோர்த்துக்கொண்டார். ஆனாலும் அந்த உறவு மனக்கசப்பிலே முடிந்ததே தவிர, மனப்பூர்வமான ஒருமைப்பாடாக அமைந்திடவில்லை! மனக்கசப்பிலே மாஸ்டர் தாராசிங், "காங்கிரஸ் திருடர் குகை—துரோகிகளின் இருப்பிடம்—பொய்யர்களின் புகலிடம்" என்றெல்லாம், எவ்வளவு குற்றம் சாட்ட முடியுமோ, அந்த அளவு சாட்டிவிட்டு, வெளியேறிவிட்டார். இணக்கம் பிணக்கிலே முடிவுற்றது. ஆனாலும் தாராசிங் அரசியல் வானில் இன்று பிரகாசித்துக்கொண்டிருப்பதற்குக் காரணம், அவர் என்ன சொன்னாலும், எதைச் செய்தாலும், அவரை ஏனென்று கேட்காமல் பின்பற்றுகின்ற பல்லாயிரக் கணக்கான சீக்கியர்கள் அவர் கட்சியிலே இருக்கிறார்கள். அதே நிலையில் நானும் எந்தச்சமயத்திலும் அரசியலில் வாழ்ந்துவிட முடியும் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்கனவே வளர்ச்சி அடைந்துள்ள கட்சி; அந்தக் கட்சியோடு, குழந்தைப் பருவத்திலுள்ள என் கட்சி சேர்ந்தால், இணைந்தால் அல்லது இணங்கிப் பணியாற்றினால், அதற்குப் பிறகு என் கட்சியின் கதி என்ன ஆகுமென்று எவரும் ஆருடம் கணித்திடத் தேவையில்லை!

கம்யூனிஸ்டுகளுடைய அன்பழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டால் என் கட்சி திரும்பவும் தலைதூக்க முடியுமா என்ற பயம் எனக்கு ஏற்படுவதற்கான முக்கிய காரணம், மற்றக் கட்சிகளைப் போலல்லாமல் என் கட்சியில் தலைவர்கள் அதிகம்—தொண்டர்கள் குறைவு! இப்போது எங்கள் முன்னாலே இருக்கிற முக்கிய பணி, தொண்டர்களைத் தேடித் திரிவதுதான்! எப்படியும் தொண்டர்களைத் தேடிப் பிடித்தாக வேண்டும்—பல்லாயிரக்கணக்கில் சேர்த்தாக வேண்டும் — என்ற ஆர்வத்தில் நான் கையாளுகின்ற இராஜதந்திரம் ஒன்றிரண்டல்ல!

இந்தச் சமயத்தில் இருக்கின்ற கொஞ்சம் தொண்டர்களையும் கேரளத்தில், கம்யூனிஸ்டுகளோடு ஒத்துழைத்திடச் செய்தால், என்ன ஆகும்? ஒன்று அவர்கள் கட்சியை விட்டு வெளியேறிவிடக்கூடும்! இல்லையென்றால், கம்யூனிஸ்டுகளோடு சில ஆண்டுகள் கைகோர்த்துப் பணியாற்றிய பின்னாலே, பி. சோ. கட்சி அவர்களிடமிருந்து பிரியும்போது, அவர்கள் நம்மோடு வரமாட்டார்கள்—கம்யூனிஸ்டு இயக்கத்தோடு இணைந்துவிடக்கூடும்.

கேரளத்தில் மட்டுமே இத்தகையதோர் நிலை ஏற்படும் என்பதல்ல — மற்ற மாநிலங்களிலும் இந்த இக்கட்டான நிலை கட்சியைப் பாதிக்கக்கூடும்.

கொள்கைகளைத் தலைவர்கள் எளிதிலே மாற்றிக்கொள்ளலாம்; அது இராஜதந்திரம் என்றுகூட மற்றவர்களாலே கருதப்படலாம்! ஆனால் தொண்டர்கள் அப்படியல்லவே!

இவ்வளவையும் புரிந்துகொண்டிருக்கிற நான் கம்யூனிஸ்டுகளின் வேண்டுகோளுக்கு எப்படி இணங்குவேன்? சோஷியலிஸ்ட் கட்சி என்னோடு சேர்ந்தால் எனக்கு இலாபம் — கம்யூனிஸ்டு கட்சியோடு என்கட்சி இணைந்தால் எனக்கு நஷ்டம்! இந்த இலாப நஷ்டக் கணக்கைப் போடாமல் நானா நடந்துகொள்வேன்? ஆழந் தெரியாமல் காலை விட்டுவிட, நானென்ன இராஜதந்திரம் தெரியாதவனா?

## நம்பூதிரிபாட்

நண்பர் டாங்கே மிக நல்லவர் என்று பலராலேபோற்றப்படுபவர்—இல்லையென்று சொல்லவில்லை. கம்யூனிஸ்டு இயக்கத்திலே இருக்கின்ற ஒரு மிதவாதி என்பது, இயக்கத்திற்குள்ளே இருக்கின்ற கருத்து! அவருக்குப் பொதுவாக நாட்டில் ஓரளவு மதிப்பு இருக்கிறது என்பதையும் உணருகிறேன். ஆனால் அவர் பேசுகின்ற பேச்சுகளின் உட்கருத்தைத்தான் என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை!

இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் கேரளக் கம்யூனிஸ்டுகளோடு ஒத்துழைக்கவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தது எந்த விதத்தில் அரசியல் அறிவுடைமை என்று நானும் திரும்பத் திரும்ப எண்ணிப்பார்க்கிறேன் - எனக்குப் புரிந்தபாடில்லை!

வேண்டுகோள் விடுப்பது என்றால், அந்த வேண்டுகோளுக்கு எத்தகைய பதில் கிடைக்கும், அந்த பதில் எந்த அளவு நமக்குச் சாதகமாகும் அல்லது பாதகமாகும், என்பதையெல்லாம் முதலிலேயே எண்ணிப்பார்த்திட வேண்டும்! அப்படி எண்ணிப்பார்க்காததாலேதான் இத்தகையதொரு மகத்தான தவறு ஏற்பட்டிருக்கிறது!

எங்களோடு ஒத்துழையுங்கள் என்று டாங்கே கேட்க, இல்லையில்லை, முடியாது என்று அவர்கள் பதில்தர, இத்தகைய தரம் குறைந்த நிலையை ஏற்படுத்துவது அரசியலிலே எத்தனை பெரிய இழுக்கு! கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எவ்வளவு மகத்தான தோல்வி—மானக்கேடு!

இந்த நிலையிலே நான் கூட்டு அமைச்சரவை அமைப்பதாக உத்தேசமில்லை என்று டில்லியில் பேசியதில் தவறென்ன?

சூழ்நிலை இக்கட்டானதென்று சொல்வதற்கு இதுமட்டுமல்ல காரணம்! அப்படியே பிரஜா சோஷியலிஸ்டுகள், டாங்கேயின் வேண்டுகோளுக்கிணங்கிக் கூட்டு மந்திரிசபை அமைத்திட முன்வந்தாலும் பிரச்சினைகள் அதோடு தீர்ந்துவிடுவதில்லையே!

நிலச் சீர்திருத்தம், கல்வியிலே சீர்திருத்தம், சிறைச்சாலை சீர்திருத்தம், இத்தகைய மகத்தான காரியங்களைக் கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி சாதித்திருக்கிறது. இத்தகைய சாதனைகளுக்கெல்லாம் நல்ல பெயர் கம்யூனிஸ்டுக் கட்சியைத்தானே சாரும்!

அப்படியல்லாமல் கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டு, நம்மாலே தீட்டப்பட்டிருக்கின்ற சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் அந்த நல்ல பெயரில் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சிக்கும் பங்கு இல்லாமலா போகும்!

ஒன்றல்ல, பல கற்களை எறிந்து, கிடைத்த மாங்காய் ஒன்று—அதிலும் மற்றொருவருக்குப் பங்கு

என்றால், அதை நானும் கேரளக் கம்யூனிஸ்டுக் கட்சியும் எப்படி ஏற்றுக்கொள்வது? மத்திய கம்யூனிஸ்டுக் கட்சி, தன் திட்டத்தை மேலும் மேலும் வலியுறுத்தியிருந்தால், அதன் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுப்பதைத் தவிர வேறு வழிதான் என்ன? ஆனால் நல்ல வேளையாகக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் குழு அவ்வாறு செய்யவில்லை! அதுவரை அந்தக் குழுவிற்கு என் நன்றி!

கூட்டு மந்திரி சபை அமைப்பதற்கு பிரஜா சோஷியலிஸ்டுகள் முன்வந்து, அவர்களும் நம்மோடு ஒத்துழைத்தால், இந்த வகையா தோர் இக்கட்டான நிலை! அவர்கள் நம்மோடு ஒத்துழைக்காமற் போனாலும் தொல்லைதான் — நம்மாலும் எதையும் சாதித்திட முடியாது! அப்போது அடுத்த பொதுத் தேர்தலில், எதைச் சொல்லி மக்களிடம் ஓட்டுக்கேட்பது?

இன்னொரு சிக்கலும் என் மனக் கண் முன்னாலே தோன்றுகிறது! கூட்டு மந்திரிசபை அமைத்திடப் போகிறோம் என்று நான் திட்டவட்டமாகக் கூறிவிட்டால், இப்போது கம்யூனிஸ்டுக் கட்சியோடு ஒத்துழைத்து வருகிற சுயேச்சையினர், தங்களுக்கு உரிய இடம் அந்த அமைச்சரவையிலே கிடைக்குமோ இல்லையோ என்ற அச்சத்தாலே, இனி ஒத்துழைக்காவிட்டால் என்ன செய்வது?

இந்தக் கெடுபிடியான சூழ்நிலையில்தான் நானொரு திட்டவட்டமான முடிவை—கூட்டுமந்திரிசபை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை-மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டேன்! இதிலே தவறுஎன்ன! இதைத் தவிர எந்தப் பாதை சிறந்ததாக இருக்கமுடியும்?

**வி. ஆர். கிருஷ்ண ஐயர்**

கூட்டு மந்திரிசபையாம், கூட்டு மந்திரிசபை! அதை மனதிலே வைத்துக்கொண்டு, கம்யூனிஸ்டு இயக்கத்தில் முக்கிய பொறுப்பிலே இருக்கிற டாங்கே, இடதுசாரிக் கட்சிகளுக்கு மறைமுகமாக அழைப்பு விடுக்கிறார்! அழைப்பு மறைமுகமாக இருந்தாலும், அதனுடைய உட்பொருள் என்னைப் போன்ற அரசியல் வாதிகளுக்குப் புரியாமலாபோகும்?

இப்போது கூட்டு மந்திரிசபை அமைத்திட முயலவேண்டிய தேவை என்ன? அப்படி அமைக்கப்பட்டால், சுயேச்சையாக நின்று தேர்தலிலே வெற்றிபெற்று, இன்று அமைச்சரவையிலே இருக்கிற என்னுடைய கதி என்ன?

எனக்கு அண்மைவரை ஏற்பட்டிருந்த பயமெல்லாம், அப்படி மந்திரிசபை அமைக்கப்பட்டால், நான் வெளியேற்றப்படக்கூடுமோ என்பதுதான்!

அப்படி நான் கணக்கிட்டதற்கும் காரணமுண்டு! இரண்டு மாதங்களுக்கு முன்னாலே ஹங்கேரியாவின் பழைய பிரதமர் நாகி தூக்கிலிடப்பட்டு, உலகே அமளிதுமளியானபோது, நான் எதுவும் பேசாமல் இருந்திருக்கலாம்! ஆனால் நான், என் மனச்சாட்சி என்னைக் குடைந்துகொண்டே இருந்த காரணத்தால், வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன், நாகியைத் தூக்கிலிட்டது மகத்தான தவறு என்று! அது மட்டுமா சொன்னேன்?

**"கம்யூனிஸ்டுகள் சமுதாயத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ளுகிறேனே தவிர, அவர்களது பொருளாதாரக் கொள்கைகள் எனக்கு உடன்பாடு உடையன அல்ல"**

என்றேன்! இதைவிடக்கம்யூனிஸ்டுகளுக்கு ஆத்திரமூட்டக் கூடிய செய்கை வேறென்ன வேண்டும்?

இப்படி நான் பேசிவிட்டதாலே தான் கூட்டு மந்திரிசபை பற்றிய பிரச்சினையும், அதிலே என் கதி என்ன ஆகும் என்ற குழப்பமான சூழ்நிலையும் ஏற்பட்டது!

ஆனால் நல்ல வேளையாக என் குழப்பமும் பயமும் தீரும் வகையில், கூட்டு மந்திரிசபை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் நம்பூதிரிபாட்!

அவர் அப்படிச் சொன்னதற்குக் காரணம் எது வேண்டுமானாலும் இருக்கலாம்—அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை!

ஆனால் இப்போதைய நிலையில் ஒன்றுமட்டும் நிச்சயமாகப் புரிகிறது. கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இன்று ஏற்பட்டிருக்கிற இக்கட்டான சூழ்நிலையில், அது என்னைப் போன்றவர்களை நிச்சயமாகப் பகைத்துக்கொள்ள முடியாது—அப்படிச்செய்வது இராஜ தந்திரமல்ல என்பது அவர்களுக்கா தெரியாது? அரசியலில் தந்திரத்தையே முதலாக வைத்துக்கொண்டு, கட்சியை நடத்தி வருபவர்களல்லவா அவர்கள்!

கேரளத்தில் ஒரு பொது விசாரணை நடத்தப்படவேண்டும்—அரசாங்கம் மக்களின் உரிமைகளைச் சிதைக்கின்ற முறையிலே நடந்துகொண்டிருக்கிறதா இல்லையா என்று ஆராய்ச்சி நடத்தியாக வேண்டும்—என்றெல்லாம் அகில இந்தியாவிலும் பேசப்பட்டு வரும்போது, "அகில இந்தியா" என்ற வாதத்தையே மூலதனமாக வைத்து கம்யூனிஸ்டுக்கட்சி பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளத் தீவிரமாக முயன்று வருகிற இந்தச் சமயத்தில், கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டாலும் மந்திரிசபை பெரிதாக்கப்படுமே தவிர, என்னைப்போன்றவர்களை வெளியேற்றிவிடுவார்களோ என்று நான் இதுவரை கொண்டிருந்த பயம் எவ்வளவு தூரம் பொருளற்றது என்று எனக்கு மிக நன்றாகப் புரிகிறது!

இந்தக் கண்டத்தில் தப்பினேன்! இனி? காலம்தான் எனக்கு வழிகாட்ட வேண்டும்--என் அனுபவம்தான் கொஞ்சம் அரசியல் நுட்பத்தை, நாவடக்கத்தை எனக்குப் புகட்டவேண்டும்!

---

பகுத்தறிவும், ஆழ்ந்த யோசனையும் மனிதர்களுக்கு மிக முக்கியமான சாதனங்கள். கண் பார்வையில் நல்ல பொருள்களைப் பொறுக்கி எடுப்பது போலவே, ஆராய்ச்சி அறிவின் மூலம் சிறந்த கருத்துக்களை அறியலாம். கண் பார்வையை அனைவரும் விரும்புவது போலவே, அறிவு வளத்தையும் அனைவரும் விரும்புவது இயற்கையாகும்.

# துறவு

## காட்சி 1

இடம்:- வீதி.

இருப்போர்:- சித்தார்த்தர், அரண்மனைப் பணியாள், மற்றவர்கள்.

(சித்தார்த்தர் பணியாள் ஒருவனுடன் நகர்வலம் வருகிறார்; மாற்றுடையில். நகரிலே நடைபெறும் நானாவிதமான காட்சிகள் அவருக்குப் புதுமையாகக் காணப்படுகின்றன. வியப்புடன் தன் பணியாளனிடம் கேட்டு வருகிறார்.

ஊமையும் செவிடுமான ஒருவனைப் பொதுமக்கள் சிலர் கேலி செய்துகொண்டிருக்கின்றனர்.

ஒருவன் காதில் ஊதுகிறான். மற்றொருவன் அவன் காதருகே சென்று பெரிய சப்தமிடுகிறான். வேறொருவன், 'பே, பே' என்று செவிடும் ஊமையுமான அவன் பேசுவதுபோலப் பேசிக் காட்டுகிறான். ஒன்றும் புரியாத நிலையில் மிரள, மிரள விழிக்கிறான். சுற்றியுள்ள எல்லோரும் சிரிக்கிறார்கள். சித்தார்த்தர் இக்காட்சிகளைப் பார்த்து ஒன்றும் புரியாதவராய் பணியாளனைக் கேட்கிறார்.)

சித்:- என்னப்பா; அங்கே? ஒரே கூட்டம்... கூத்தும், கும்மாளமும்.

பணி:- (சென்று பார்த்து வந்து) ஊமையும், செவிடுமான ஒருவனிடம் பரிகாசம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சித்:- (விளங்காமல்) ஊமையா...? செவிடா...? அப்படின்னா?

பணி:- அதாங்க; ஊமை என்றால் வாய் பேசாமை. செவிடு என்றால் காது கேளாமை.

சித்:- உம்... என்ன விசித்திரம்...! மனிதருக்குள்ளே இப்படிப்பட்டவர்கள்கூட இருக்கிறார்களா?

பணி:- ஏராளம் பேர் வேந்தே...

[சித்தார்த்தர் முகத்தில் சோகம்கவ்வுகிறது. அதற்குள் அந்த ஊமை, 'பே, பே' என்று கத்திக்கொண்டு ஓடிவிடுகிறான். அவனைத்தொடர்ந்து கூட்டத்தினரும்ஓடுகின்றனர். ஓடும் கூட்டத்தைச் சித்தார்த்தர் பார்த்தவண்ணம் இருக்கிறார். எதிர்ப்புறமிருந்து குருடன் ஒருவன் கோலைத் தட்டிக்கொண்டு வருகிறான்.]

குருடன்:- ஐயா......இந்தக் கண்ணற்ற கபோதியைப் பாருங்கள் ஐயா........கதியற்ற எனக்குக்

கரந்தை-கணேசன்

கருணைகாட்டுங்கள்... உங்கள் குலம் வாழ எனக்கோர் உதவி செய்யுங்கள் ஐயா!

சித்:- குருடனை மேலும், கீழும் உற்றுப்பார்த்துவிட்டு; பணியாள் பக்கம் திரும்புகிறார்.

பணி:- இவன் குருடன்... பார்க்கும் பார்வை இழந்த பஞ்சை; இவனுக்கு இவ்வையகமே இருள்தான். உலகில் காணும் காட்சிகள் அறியான், மாடமாளிகையும், மயானமும் உருவத்தில் ஒன்றுதான் இவனுக்கு.

குரு:- ஆமய்யா...... என்னைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒன்றுதான். நான் காண்பது எங்குமே இருள்தான்.

சித்:- (பெருமூச்சிட்டு) விநோதமான உலகம்... (தன் கழுத்தில் உள்ள முத்துமாலையைக் கழற்றித் தருகிறார்)

பணி:- அரசே...! ஆபத்து...!

சித்:- ஆபத்தா...?

பணி:- ஆம் அரசே! தாங்கள் செய்ய எண்ணிய காரியம் மிக மிக ஆபத்தானது. இவ்வளவு விலை உயர்ந்த முத்துமாலை இந்தப் பராரியிடம் எப்படி வந்தது என்று எண்ணமாட்டார்களா? பார்ப்போர். குருடனே எங்கோ களவாடி வந்திருக்கிறான் என்றல்லவா எண்ணுவர். நல்லது செய்யப்போய் நாசம் விளைவிக்கக் கூடாதல்லவா...?

சித்:- (நிதானித்து) என்ன விசித்திரம்...

பணி:- (குருடனுக்குக்காசு கொடுக்கிறான்) இவ்வளவுதானா இன்னும் எவ்வளவோ; வாருங்கள்.

### திருப்புக்காட்சி

[எதிரே ஒரு நொண்டி வருகிறான். அவனைக்கண்டு ஆச்சரியமுறுகிறார் சித்தார்த்தர்]

சித்:- மனிதர்களில் முடமானவர்கள் கூடவா இருக்கிறார்கள்?

மணி:- இதில் ஒன்றும் அதிசயமில்லையே அரசே! கையிழந்தோர், காலிழந்தோர் என உறுப்புக்கள் குறைந்தோர் உலகில் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

சித்:- இவர்களும் ஆண்டவன் படைப்புத்தானே?

பணி:- ஆம், அரசே! அதில் கூடவா சந்தேகம்?

சித்:- ஆண்டவன் கூடவா அநீதியானவன்?

பணி:- அவனைக் குறைகூற நாம் யார்?

சித்:- அப்படியானால், அவனுடைய படைப்பிலே இத்தனை வேற்றுமைகள் ஏன்?

பணி:- அது மட்டுமா... அதோ பாருங்கள்.

[அவன் சுட்டிக்காட்டும் வழியில் ஒரு தொழுநோயாளன் இருக்கிறான்]

சித்:- ஐயோ! என்ன கோரம்; இப்படியும் ஒரு மனிதனா? இவனும் அவன் படைப்பா? சித்திரவதையல்லவா படுகிறான்.

பணி:- எல்லாம் அவனவன் வினை. வந்த வழி. முன் ஜென்மத்தில் பாபம் செய்திருப்பான; அதன் பலனை இப்போது அனுபவிக்கிறான். அதற்காக நாம் அனுதாபப்பட்டு என்ன செய்வது அரசே! அதிலும் தாங்கள் இந்த மண்டலத்தின் மன்னர். மணிமுடியைத் தாங்கிக்கொண்டிருக்கும் மகுடாதிபதி. இதையெல்லாம் பார்த்து இப்படியெல்லாம் மனம் இளகக்கூடாது. எதையும் ஏற்கும் இதயம் பெறவேண்டும். மனதை இரும்பாக்கிக்கொள்ள வேண்டும்.

[மற்றொரு புறத்திலிருந்து சவ ஊர்வலம் வருகிறது]

சித்:- (சற்றுநேரம் பார்த்துவிட்டு) என்ன அது? ஒரே கூட்டம். இடையில் நாலுபேர் எதையோ தூக்கிக்கொண்டு வருகிறார்கள். சோக கீதம் வேறு பின்னணி செய்கிறது.

பணி:- சவ ஊர்வலம் வேந்தே! சவ ஊர்வலம். புரியவில்லையா அரசே! உடலைவிட்டு உயிர் பிரிந்துவிட்டது. உடலைக் கொளுத்த எடுத்துச் செல்கிறார்கள். இறுதி மரியாதை செய்கிறார்கள்.

சித்:- இறப்பு என்பது மனிதனுக்குக் கூடவா இருக்கிறது?

பணி:- நிச்சயமாக இருக்கிறது இறைவனே! உலகிலே மனிதன் என்று பிறக்கிறானோ அன்றே இறப்பும் அவனைத் தொடருகிறது. மனிதன் எதை அடைந்தாலும் அடையாவிட்டாலும், இறுதியில் அவன் நிச்சயமாக இறப்பை அடைகிறான். பிறந்து, தவழ்ந்து எழுந்து, மழலையாடி, வளர்ந்து, வாலிபப்பருவம் எய்தி, வயோதிகப் பருவம் அடைந்து இறுதியில், இறக்கத்தான் செய்கிறான். அதனால்தான் 'வாழ்வது நிலையல்ல, சாவது சதம்' என்று மகான்கள் பலர் கூறினர்.

சித்:- பணியாளனே...! இருண்ட குகையிலே உலவிய எனக்கு ஒளி இடைத்துவிட்டது. கண்கள் திறந்துவிட்டன. குவலயம் அறியாக் குருடனாக இருந்தேன் நான், இனியும் அப்படி இருப்பதற்கில்லை பரந்து. விரிந்த உலகைப் பார்க்கிறேன், அங்கே காணப்படும் பல விதமான கோணல் மாணல்களையும் பார்க்கிறேன. இனி எனக்கு யாரும் திரையிட முடியாது. வா...... போவோம்...மேலே போவோம். விபரீதம் நிறைந்த இந்த உலகின் விநோதங்களையெல்லாம காண்போம்.

பணி:- தாங்கள் அரசர்......

சித்:- அரசு தடையாக இருந்தால் அதையும் இழக்கத் தயார். இனி என் மனம் பொறுக்காது. கண்ணும் கருத்தும் அற்றப்போதி அல்லவே நான்.

## திருப்புக் காட்சி

[ஏழைகள் வாழும் குடிசைகள் நிறைந்த இடத்திற்குச் செல்கிறார்கள்.]

பணி:- பாருங்கள் பாராளும் வேந்தே பாருங்கள்! அரசமாளிகை, அந்தப்புரம், பூங்காவனம், பொழுதுபோக்கு மண்டபம், மாடகூடம், கோட்டை கொத்தளம் என்பவைகளை மட்டுமே பார்த்துப் பார்த்துக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்திருப்பீர்கள். அந்தக் கண்களால் இதையும் சற்றுப் பாருங்கள். அங்கே சங்கீதம் வேண்டுமென்றால் இசைவாணர்கள் பலர் வருவர் இசைபாட (ஒருபுறம் அழுகை) இங்கோ, அதோ கேட்கிறதே அழுகைக் குரல், அதுதான் சங்கீதம். அங்கே நடன மாதர்கள் பலருண்டு நாட்டியமாட (மற்றொரு புறம் சண்டை) இங்கோ இவர்களுடைய போராட்டம்தான் நாட்டியம். (வேறொருபுறம் காட்டி) அதோ பாருங்கள்! கையே தலையணையாய், கட்டாந்தரையே படுக்கையாய், வானமே கூரையாய் வாழும் வகையற்றவர்களை, இவர்களும் மனிதர்கள் தான். மகேசுவரனால் படைக்கப்பட்ட மனிதர்கள் தான். இத்தனைக்கும் இவர்கள் இல்லை என்றால் உலகிலே புதுமையே இல்லை என்று கூறிவிடலாம். மண் மேட்டை எல்லாம் மாடமாளிகையாக்கியவர்கள். சிதைந்து கிடந்த இடங்களையெல்லாம் சித்திரப் பூஞ்சோலை ஆக்கியவர்கள். காடுவெட்டி, நிலந்திருத்தி கழனிகண்டு, அதிலே கதிர் காண வகை செய்தவர்கள், ஆனால்......இவர்கள் நிலையோ ......அரசே......!

சித்:- போதும்...! பணியாளனே ......! போதும்...! பகவானின் படைப்பிலே இவ்வளவு பாரபட்சமா? உயர்வு தாழ்வுகளா? களிப்பு ஓர்புறம், கண்ணீர் ஓர் புறமா? சீர் ஓர்புறம் சிதைவு ஓர்புறமா? எண்ணிப் பார்க்க முடியவில்லையே என்னால். இவைகளை மாற்றவே மார்க்கமில்லையா? இதுவா எல்லாம் வல்லவனின் செயல்? இருக்காது......ஒருக்காலும் இருக்காது. இதற்கு மாற்று ஏதாவது இருக்கவேண்டும். உலகம் தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறது. அதைத் தடுத்தாக வேண்டும்.

பணி:- வேந்தே...!

சித்:- விசாரம் என்னைச் சூழ்ந்துவிட்டது; வெற்றிக்கு வழி தேடியாகவேண்டும். வா, போவோம், அரண்மனைக்கு.

## காட்சி 2

இடம்:- அந்தப்புரம்

இருப்போர்:- சித்தார்த்தர், மாயாதேவி,

(மாயாதேவி யாழ்மீட்டியபடியே காதல் தாபம் தொனிக்கப் பாடல் ஒன்றைப் பாடி முடிக்கிறாள். சித்தார்த்தர் மனச்சோர்வோடு வருகிறார்; அவர் மனதில் நகர் வலத்தில் கண்ட காட்சிகள் திரையிடுகின்றன.)

மாயா:- அத்தான்......

சித்:- (மௌனம்)

மாயா:- அத்தான்......

சித்:- ..............

மாயா:- (எழுந்துசென்று தொட்டு) அத்தான......

சித்:- (திடுக்கிட்டு) ஹூம்...

மாயா:- என்றைக்கும் அன்பே என்கிற அழைப்பைக் கேட்டிருக்கிறேனே தவிர, இந்த மௌனத்தைக் கண்டதில்லையே அத்தான். ஏன் இப்படி மௌனி ஆனீர்கள். ஏதோ... தாங்கள் மனதில்......

சித்:- ஒரே குழப்பம்......

மாயா:- காரணம்...?

சித்:- காரணம்...!

மாயா:- என்ன அத்தான் மனதில் ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு மறைக்கப்பார்க்கிறீர்கள்.

சித்:- அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மாயா!

மாயா:- என்ன அத்தான் நெற்றிப் பிறைமேோ நீண்டு இல்லை, நெரிபடுகிறது. விழிகளோ மலரவில்லை, கூம்பிக்கிடக்கின்றன. அதரங்களோ வெடிக்கவில்லை அடைபட்டுக் கிடக்கின்றன. அழகு முகத்திலோ பொலிவு இல்லை; அசடு தட்டுகிறது. மனதிலே வேறு குழப்பம்; இதெல்லாம் என்ன கண்ணாளா? மனச்சோர்வு நீங்க மார்க்கம் சொல்லட்டுமா?

சித்:- மார்க்கம்......

மாயா:- ஆமாம், அன்பரே........ இதோ......(யாழெடுத்து மீட்டுகிறாள்)

சித்:- (குடிசையில் அழும் சிறு குழந்தையின் ஓலம் காதில் கேட்கிறது.)

இதுவா மார்க்கம்......இது இல்லை மாயா இது இல்லை......

மாயா:- (பதறிப்போய்) ஆ......... அத்தான்........ தங்களை......... தங்களை......... .

சித்:- (நிதானித்து) ஒன்றுமில்லை மாயா, ஒன்றுமில்லை. பயப்படாதே. எதையோ எண்ணிக் கொண்டு எதையோ கூறிவிட்டேன். எல்லாம் உறங்கினால் சரியாகிவிடும் வா......

## திருப்புக் காட்சி

(மஞ்சத்தில் சென்று துஞ்சுகிறார்கள். சித்தார்த்தர் தூங்கும் தன் குழந்தையைப் பார்க்கிறார், மீண்டும் ஓலம் கேட்கிறது- மனம் பேதலிக்கிறது. மாலையில் கண்ட காட்சிகளும தான்கேட்ட கேள்விகளும் பணியாளர் அளித்த விடைகளும் நினைவுக்கு வருகின்றன. புரண்டு புரண்டு படுக்கிறார்.)

பணியாள்குரல்:- அதோபாருங்கள் கையே தலையணையாய், கட்டாந்தரையே படுக்கையாய், வானமே கூரையாக வாழும் வகையற்றவர்களை. இவர்களும் மனிதர்கள்தான், மகேசுவரனால் படைக்கப்பட்ட மனிதர்கள்தான்.

சித்-குரல்:- ஆண்டவனுடைய படைப்பிலே இவ்வளவு பாரபட்சமா?

பணி-குரல்:- அதை கேட்க நாம், யார் அரசே...?

காடு வெட்டி, நிலந்திருத்தி, கழனி பல கண்டு அதிலே கதிர் காண வகை செய்தவர்கள், செய்பவர்கள். ஆனால்...இவர்களின் கதியோ...! அரசே...!

சித்-குரல்:- களிப்பு ஓர்புறம் கண்ணீர் ஓர்புறம் அழுகை......

[சடக்கென எழுகிறார். தன் மனைவியையும், மகனையும் ஒரு முறை துயரத்துடன் பார்க்கிறார். பின்னர் நிம்மதியற்ற நிலையில் உலாவுகிறார். மீண்டும் எண்ணங்கள் பின்னணி செய்கின்றன]

எவ்வளவோ மக்கள், கோடானுகோடிபேர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுக்கப் பாயின்றி, குந்தக் குடிசையின்றி எச்சில்பட்ட மிச்சப் பண்டங்களே உணவாகவும், கிழிந்த கந்தல்களே உடையாகவும், மண் மாதாவின் மடியையே தங்களின் மாளிகையாகவும் கொண்டு வாழும்போது நமக்குமட்டுமென்ன அரண்மனை, அந்தப்புரம், ஆடம்பர வாழ்வு! சே...சுகபோகமே உருவான சொர்க்கலோகம் ஒருபுறம், துன்பமே உருவானநரகலோகம் ஒருபுறம். உலகில் மனிதர்கள் வாழத்தான் பிறக்கிறார்கள், வதைபட இல்லையே? வாழ ஒரு கூட்டம், வதைபட ஒரு கூட்டம்! சீர்பெற ஒரு கூட்டம், சிதைவுற ஒருகூட்டம். உண்ண ஓர் கூட்டம், உழைக்க ஓர் கூட்டம், நிம்மதிபெற ஓர் கூட்டம், நிலைகுலைய ஓர் கூட்டம் என்று ஆண்டவன் பேதப்படுத்தி மனிதகுலத்தைப் படைத்திருக்கிறான். ஆண்டவன் படைப்பில் யாவரும் ஒன்று என்றல்லவா யாவரும் கூறுகின்றனர். அப்படி இருக்கும்பொழுது இத்தனை பெரிய ஏற்றத் தாழ்வுகள் எப்படி வந்தன?

குரல்:- அதுதான் அவரவர்கள் தலைவிதி. வந்த வழி.

சித். குரல்:- விதியா...?

ஒரு குரல்:- ஆம் அவரவர்கள்முன் வினைப்பயனுக்கு ஏற்பவிதி அமைகிறது.

சித். குரல்:- முன் வினைப்பயனா? அதற்குக் காரணம்?

குரல்:- முன்ஜென்மத்தில் அவனவன் செய்த நன்மை தீமையே அதற்குக் காரணம்.

சித். குரல்:- நன்மையும் தீமையும் அவர்கள் செய்வது எப்படி?

குரல்:- அவர்கள் மனத்தின் கட்டளையால்.

சித். குரல்:- மனத்திற்குக்கட்டளை இடுவது யார்?

குரல்:- அவரவர்களே.

சித். குரல்:- அப்படியாயின் அவரவர்களாகவே அமைத்துக் கொண்டார்களா அவரவர்களை?

குரல்:- அவர்கள்தான் ஆண்டவனின் படைப்பாயிற்றே?

சித். குரல்:- படைக்கும் ஆண்டவன் ஏன் அவர்களை ஏறுமாறு கொண்டவர்களாகப் படைக்க வேண்டும்? எல்லோரையும் நல்லவர்களாகப் படைக்கக் கூடாதா? அல்லது அப்படி ஆண்டவனால் படைக்க முடியாதா?

குரல்:- முடியாது என்பதல்ல, முடியும். அவனால் ஆகாதது எது? அணுவிலிருந்து அண்ட சராசரங்கள் அத்தனையுமே அவனால் ஆனவைகள். ஆக்கவும் அழிக்கவும் வல்லவன் அவன். போக்கவும் புதுப்பிக்கவும் வல்லவன் அவன். அப்படியிருக்க அவனால் ஆகாதது உண்டா? இதெல்லாம் அவனுடைய திருவிளையாடல்கள். புனிதமான லீலாவினோதங்கள். அவ்வளவுதான்.

சித். குரல்:- ஆண்டவனுடைய ஆசாபாசங்களுக்கு அப்பலைகளா

ஆட்படவேண்டும்? ஏழைகளா இடர்ப்படவேண்டும்? இதுதான் அவனுடைய முறை, வழி, வகை என்றால்; அப்படி முறையுடைய, வழியுடைய, வகையுடைய ஆண்டவன் தேவை இல்லை; ஒருக்காலும் தேவை இல்லை.

குரல்:- நீயார் அதைச் சொல்ல? உன் கண்களை அகல விரித்து (காட்சிகளாக வருகின்றன) பரந்து கிடக்கும் விரிந்த உலகைப்பார். அங்கே பரமனுக்குச் செய்யப்படும் பூஜாவினோதங்களைக் காண். நீ யாருக்காகப் பரிந்து பேசுகிறாயோ, எவருக்காக ஆண்டவனையே சந்தேகித்து அவனிடம் வினாதொடுக்கத் துணிந்தாயோ, அவர்கள் ஏழைகள், இல்லாதவர்கள், துன்பச் சூறாவளியால் அல்லலும் அவதியும் படுபவர்கள். பாசுரம்பாடிப் பரமனைத் தொழுவதைப்பார். உனக்கு ஏன இந்த வெட்டிவேலை? ஆளப் பிறந்தவன்நீ! அரசமுடி உன்னை நாடிக் கிடக்கிறது. யாரும் தேடிப் பெற அரிதான போக வாழ்வை இழக்கத் துணியாதே போ...! பொன்னார் மேனியாம் புதுப்பருவ மங்கை உன்னைக் கூடக் காத்துக் கிடக்கிறாள். மண், பெண், பொன்மட்டுமா, மணிமுடிவேறு உனக்கு. போ... போ...போய்ப் படுத்துக்கொள்.

சித்:- (மனதைச் சமாளித்துக் கொண்டு) சே...இனியும் இங்கிருப்பது தவறு. இன்றிரவே இப்பொழுதே புறப்பட வேண்டும், இல்லாவிட்டால் மனம் மாறிவிடும். ஏழையின் கண்ணீர் நமக்குப் பன்னீராகிவிடும். சமுதாயம் மேலும் சகதி நிறைந்த சதுப்பு நிலமாக இருக்கக் கூடாது. புதுமை பூக்கும் புன்னகைப் பூங்காவாக மாற வேண்டும். என்ன ஆனாலும் இவ்வுலகில் இன்பமே எழில் பெற வழிதேட வேண்டும். அதற்கு ஒரேவழி......உலக பந்தம், பாசம் ஏதும் அற்ற இடத்திற்குச்சென்று புதியதோர் பாதை காண்பதுதான். அதற்குத் தேவை...?...துறவு......... துறவு...

(என்றபடியே வெளியேறுகிறார்.)

★

# அறியாமை!

பொ. மறைமலை

மாடமாளிகையும் கூடகோபுரமும் மாண்புடன் மிளிர்ந்திருக்கும் தோற்றம். பொலிவுடன் அமைந்திருக்கும் பரந்த வீதிகள். வீதிகள்தோறும் எழில் மாடம் அமைந்த ஏழடுக்கு வீடுகள். சிறு சிறு குடில்கள். வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கும் பருவப்பாவையர்கள். அறிவும் திருவும் அமைந்த அணங்குகள்.

அன்பும் பண்பும் அழகும் படைத்த வீரப்பெருமகன் சேரன் வருகிறான். அவன் உலாவரும் காட்சி காணக் கண்கள் ஆயிரம் வேண்டும். மலையென அசைந்து வரும் களிறின் மீது சேரன் குன்றிலிட்ட விளக்குப்போல வருகிறான். பரந்த மார்பிலே புரளும் மணிமாலைகள் ஒளி வீசித் திகழ்ந்தன.

சேரனைக் காணும் ஆவலுடன் சேல்விழியர் மாடிமீது நின்றனர். அவனைக்காண வேண்டும் என்ற ஒரே எண்ணத்தினால் அவன் அழகில் மயங்கி நின்றாள் ஒருத்தி. அவன் திருவுருவத்தைத் தன் இதயத்திரையிலே தீட்டிக்கொண்டாள்.

இரவிலும் பகலிலும் சேரனையே எண்ணி ஒரே ஏக்கம். தூக்கமே இல்லை. சேரனை அடைய வேண்டும் என்ற ஊக்கத்தில் உடல் தளர்ந்து நிற்கும் நிலை.

மகளின் மனமாற்றத்தைக் கண்டாள் அருமை அன்னை. ஆனால் அறியாமை சூழப்பெற்ற பேதை அன்னையவள்! அன்னை பதை பதைத்தாள். மகளின் வாட்டத்தைப் போக்க முற்பட்டாள். மகளின் உளக்கருத்தை அவள்பேதை உள்ளம் எங்கே அறியப்போகிறது?

வயதான கிழவியொருத்தியை அழைத்து மகளின் மனமாற்றத்தின் காரணம் என்ன என வினவினாள்.

பழமையிலே,மூடநம்பிக்கையிலே ஊறிப்போன அம்மூதாட்டி இல்லாததையெல்லாம் கூறினாள். இக்காலக் கிழவிகளுக்கும் இதேவேலை தான் என்பதைநாம் மறந்துவிடக் கூடாது. சாதாரணமாக நோய் வந்துவிட்டால் அதற்கு வைத்தியன் தேவைப்படமாட்டான்

பூசை செய்; பலிகொடு! நோய் தீரும். நோய்க்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? அறியாமையிலும் அறியாமை இது! அதுபோல அக்கிழவியும் கூற ஆரம்பித்தாள்.

"உன் மகளுக்குப் பேய்பிடித்து விட்டது...!"

"என்ன? பேயா...?"

"ஆமாம்! பின் என்னவாம்? இவள் இப்படி உருக்குலையக் காரணம் பேய்தான்! இதில் சந்தேகமில்லை, நான் சொல்வதைக் கேள்...!"

"சொல்லுங்கள் சொல்லுங்கள். இப்போதே செய்கிறேன்! என்ன செய்யவேண்டும்? ஐயோ!மகளே!"

"கவலைப்படாதே! தோட்டத்திலே மரத்தின் கீழ் சாணம் கொண்டு நன்றாக மெழுகிச்சுத்தம் செய். பிறகு வெள்ளாட்டின் இரத்தத்தைத் தெளித்து, ஒரு குடத்தில் தண்ணீருடன் மாவிலையை வை. உன் பெண்ணை அந்த இடத்தில் உட்காரவைத்து குடத்துத் தண்ணீரை அவள் தலையில் ஊற்று! பேய் தானாகப் போய்விடும்...!"

"உண்மையாகவா? இதோ இப்போதே செய்கிறேன்...!" என்று கூறிக்கொண்டு அவள் ஓடினாள்.

இதைக்கேட்ட அப்பெண் தனக்குள் தன் அன்னையின் அறியாமையை எண்ணி நகைத்துக் கொண்டாள்.

இவைகளைக் கண்ட அவள் தோழி, "ஏண்டி! என்ன இவைகளெல்லாம்; ஒரே அமர்க்களமாயிருக்கிறதே!"

"எல்லாம் என் அன்னையின் அறியாமை! என் உள்ளத்தை அறியாத அவள் உருப்படாத காரியத்தில் இறங்கியிருக்கிறாள். என் செய்வேன்? என் உள்ளத்திலே குடிகொண்ட என் காதலன் வாராமல், என் காதல் நோய் "நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ"

"காராட்டு உதிரம் தூஉய் அன்னை
களன் இழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ—
போராட்டு
வென்று களங் கொண்ட வெஞ்சின
வேல் கோதைக்கு என்
நெஞ்சு களங் கொண்ட நோய்!"

எனவரும்முத்தொள்ளாயிரப்பாட்டால் அவள் அன்னையின் அறியாமையை அறியலாம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

துள்ளியெழுந்து 'கெண்டை கெண்டை' என்று கூறிக்கொண்டே, கரையை நோக்கி ஓடினுள். கரை சேர்ந்து பார்த்த கன்னி கலக்கமுற்றுள். கயலிரண்டையும் காணவில்லையே! என்ன மாயம் அது? அவளறியாள் தன் கண்ணின் சாயலே, நீரிலே தான் கண்ட கயலிரண்டும் என்பதை.

நேரே நடக்கலுற்றுள் வீடு நோக்கி. சிறிது தூரமே சென்றிருப்பாள். சம்பு மரமொன்று ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் அருகிலேயே முல்லைக்கொடி ஒன்று வெற்றிப் பெருமிதத்துடன் புது மலர்களைப் பூத்துக்கொட்டி நின்றது. மலர்க்கொடி கண்ட மங்கை சற்றே நின்றுள். அழகு முல்லையின் மணத்தை அப்படியே முகர்ந்தாள் அவ்வளவுதான்......! கருத்திலே சிந்தித்த காதலால் கண் முன்னேயே வந்துவிட்டான்...

"அத்தான்...! பூத்துக் குலுங்கும் புது மலர்களைப் பார்த்தீர்களா..."

"எங்கே...!"

"இதோ..." என்று கொய்யாத மலர்களைத் தன் கையாலணைத்துக் காட்டினுள்.

"அதிலென்ன இருக்கிறது குறிப்பிடுமளவுக்கு?"

"அதிலென்னவா......?" அணிவகுத்து நிற்கும் வீரர்களைப்போல வரிசையாய்த் திகழும் இம்மலர்க்கொத்துத் தங்களுக்கு இன்பந் தரவில்லையா?

"சரிதான் கண்ணே! அவையென்ன, உனது முத்துப் பற்களின் மோகனத்தைவிடச் சிறந்ததா என்ன?

"களுக்..." சிரித்துவிட்டாளவள் வாய்விட்டே.

தலை நிலம் நோக்க விலகிச்சென்றுள். சம்புமரத்தின்மீது சாய்ந்து நின்று மேலே பார்த்தாள். இலையொன்றில் வெண் புறவு இரண்டு காதல்மொழிபேசிக் களிப்புற்றிருந்தன. அவ்வின்பக்காட்சி தன் தனிமைத்துயரை அதிகப்படுத்த, அக்காட்சியைக் காணப்பொருது, சட்டெனக் கீழே பார்த்தாள்.

கனி குலுங்கும் சம்பு மரத்தில் சாய்ந்து நின்ற தலைவியின் கண்களில் பட்டது, மரகத மணியென ஒளி திகழும் பொருளொன்று; சம்புவின் கனி! ஆம் அப்படித் தான்பட்டது அவள் கண்களுக்கு. சம்புவின் கனியை உண்ணலாமெனத் தன்கையாலெடுத்து மெதுவாகப் பார்த்தாள்.

சோலைமலர்த் தேனை வேண்டுமளவு குடித்துவிட்டு மயங்கிக் கிடந்த அவ்வண்டு, மங்கையின் மலர்க்கரம் தீண்டிய உணர்விலே, எங்கிருக்கிறோம் என்று கண் விழித்துப் பார்த்தது. தலைவியின் தளிர்க்கரம் பார்த்த வண்டு, தாமரை மலராகவே எண்ணிவிட்டது, மேலே நோக்கிற்று. தலைவியின் பிறைநுதல் கூடிய மதி வதனம். கார்மேகமன்ன கரிய குழல்.

கண் விழித்து பார்த்த வண்டினது போதை போய்விட்டது—மயக்கம் தெளிந்துவிட்டது!

ஐயயோ...! கார்மேகத்திடையே முழுமதி வந்துவிட்டதே! இன்னும் தாமரையிலேயே தங்கியிருக்கிறோமே! பகலவனைக் கண்டு மலரும் தாமரை, நிலவைக் கண்டு குவிந்துவிடுமே...............என்று துணுக்குற்றது.

"விர்ர்ர்........."

தியங்கிக் கிடந்த வண்டு மயக்கம் தெளிந்து பறந்துவிட்டது. கன்னியவள் கருவண்டைக் கனி என்று கையிலெடுத்ததும், அது காற்றிலே பறந்ததும் கண நேரத்தில் நடந்துவிட்ட நிகழ்ச்சி! கையிலெடுத்த கனி பறப்பதைப் பார்த்த தலைவி மயக்கமுறும் நிலைக்குப் பயந்துவிட்டாள். கையிடைப்பட்ட கயல் கரைவந்து பார்த்ததும் காணவில்லை அங்கு. கையிலெடுத்த கனியும் காற்றில் பறக்கிறது இங்கு.

ஐயமுற்று தலைவியின் கொவ்வைக்கனி இதழ்கள் பரபரப்புடன் அசைந்தன. "போனது வண்டா? அல்லது பழந்தான் பறந்ததா?" என்னும் வார்த்தைகள் வெளி வந்தன.

இதோ அந்தப் புலவனது வரிகளிலேயே......

தண்டுலாவிய தாமரை பொய்கையில்
மொண்டு நீரை முகத்தரு கேந்தினுள்,
கெண்டைகெண்டை யென்றக்கரை யேறினுள்
கெண்டை காண்கிலள் நின்றுகலங்கினுள்.

*

தேனுகர் வண்டு மதுதனை யுண்டு
   தியங்கியே கிடந்ததைக் கண்டு
தானதை சம்பு வின்கனி என்று
   தடங்கையி லெடுத்துமுன் பார்த்தாள்
வானுறு மதியம் வந்ததென் றெண்ணி
   மலர்க்கரம் குவியுமென் றஞ்சி
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
   புதுமையே யிதுவெனப் புகன்றுள்.

*

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாளடைவில் ஏற்பட்ட விளைவுகளையும் வரலாறு படித்தவர்கள் நன்கு அறிவர்.

தமிழ்மொழியின் சொற்களை வடமொழி இரவல் பெற்றதோடு தன் மொழிக்கு உரியதாக்கிக் கொண்டது என்றும், அம்மாதிரியான நானூற்று இருபது சொற்களை எடுத்துக்காட்டுகிறுர் கன்னட அகராதியைத் தொகுத்த டாக்டர் கிற்றல்.

'இருத்து பிறப்பதற்கு முன்னும் ஆரியர் வருகைக்கு முன்னும் திராவிட இனம் பொருளாதார இலக்கிய திருமண முறைகளில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது' என்றும், இதன் மூலம் தான் ஆரிய நாகரிகம் செழிப்பும் ஆழமும் எய்தியது' என்றும், 'சம்கிருதம் என்றால் நன்றாகச் செப்பனிடப்பட்டதென்றும், 'திராவிடர் ஒரே இனம் தென்னகம் முழுதும் பரவி இருந்தனர்' என்றும், டாக்டர் ஏ. கே. ஆனந்த குமாரசாமி, தாகூர், சட்டம் பி. சாமி, க. சி. கந்தையா போன்ற சிறந்த ஆராய்ச்சியாளர்கள் தெள்ளத் தெளிய விளக்கி இருக்கிறுர்கள்.

இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டித்தான் நாமும் சொல்கிறோம். நம்முடைய குரலை அசட்டை செய்தாலும், ஆராய்ச்சியாளரின் சொல்லுக்கும் எழுத்துக்கும் நல்லறிவாளர்கள்மதிப்பளிக்க வேண்டும் என்பதாக.

பழம்பெருமை வாய்ந்த நம்நாடு அடிமைத்தளையால் கட்டப்பட்டிருக்கிறது. பண்பாடு சிறந்த திராவிட இனம் பர்மாவிலும், சிங்கப்பூரிலும், சிங்களத்திலும்சிக்கிச் சீரழிகிறது. மற்றைய மொழிகளுக்கு வழிகாட்டிய தமிழ்மொழி—திராவிட மொழி வளர்ச்சி குன்றி இருக்கிறது.

எனவே பொன்முடி புகட்டும் பாடத்தைப் படித்தாவது ஆட்சியாளர்களைக் கடமையைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் தாயகத்தை—திராவிடத்தைக் காத்தல் காளையரின் கடமை என்று கூறி "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற பொன்மொழிக் கேற்பப் பணியாற்றுவதையே கடமையாகக்கொண்டு செயல்படுவோமாக.

★

# புதுவயல் ★ காண அழைக்கிறார்!

உணவுப் பிரச்னை ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டே போகிறது — பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இப்போது பல மடங்காக மக்கள் தொகை பெருகிவிட்டது—உலகத்தில் மூன்று பாகம் நீர், ஒரு பாகமட்டுமே நிலம் —அந்த நிலத்திலும் பாலைவேறு உளது, பண்படுத்த இயலாத மலைகள் உள்ளன, மணல் வெளிகள் உண்டு, இவைகள் போக எஞ்சிடும் நிலம் கொஞ்சம்!—அதிலும் காடுகள் பல, அந்தக் காடுகளை அழித்து கழனிகள் ஆக்கலாமா, இருக்கின்ற வயல்களிலே இன்னும் அதிகம் உற்பத்தியாக்க என்னென்ன செய்யலாம் என்று உலக அறிஞர்கள், கவலை தெரிவிக்கின்ற நேரம் இது! இச்சமயத்திலே, புதியதொரு 'வயல்' காண அழைக்கிறது, 'கல்கி' ஏடு!!

தங்கவயலா, வெள்ளிவயலா, இரண்டையும் மிஞ்சுமளவில் இடம் பெற்று வரும் இரும்பு வயலா—காலைவிளைத்தால் மாலை விளையும் அற்புத வயலோ, — கரும்பு போட்டால் சர்க்கரை தரும் அதிசய வயலா—எதைக் காண அழைக்கிறார், இவ்வளவு ஆர்வத்தோடு என்று கேட்கத் தோன்றும். ஏனெனில், சின்னாட்களுக்கு முன், இந்த உபகண்டத்து அறிஞர்களைக்கொண்டு, இந்திய அரசின் நாணயச்செலாவணி குறித்து அலசி அலசி ஆராய்ச்சிக் கட்டுரைகள் பெற்று, நாட்டுக்கு அளித்த ஏடு, அது. புதுவயல் காண அழைக்கிறதென்றதும்,


## அரங்கண்ணல்


நாட்டின் பொருளாதாரச் சிக்கல் ஒழியவும், பசிப்பஞ்சம் அழியவுமான ஒரு வயலைக்கண்டு சொல்கிறதுபோலும், என்றே எண்ணத் தோன்றும். பள்ளியில் சூரிய கிரகணம் எப்படி ஏற்படுகிறது என்பதை விளக்கிவிட்டு, வீட்டுக்குப் போனதும் சூரியனை ராகு விழுங்குவதால் உண்டாவதே கிரகணம் என்று கூறிக் கூறி நெஞ்சுரம் கொண்டவர்களால் உலாவவிடப்படும் ஏடல்லவா அது? அதனால், பொருளாதாரம்பற்றிய புள்ளி விபரங்களைக் காட்டிய அந்த ஏடு, இப்போது 'போகிற கதிக்கு புண்யம்' தேடச் சொல்கிறது! மக்களை, பக்தி வயலுக்கு அழைக்கிறது! திகைக்காதீர்கள், பக்திவயலாம்—அந்த வயலில் விளைந்த கருத்துக் கதிர்களை அறுத்தெடுத்து வழங்கவிருக்கிறதாம், தொடர்ந்து! அந்தக் கதிர்களைத் தின்றால் பசி அடங்குமா — கொதித்து அழும் குழந்தைக்கு "ஆஸ்டர் மில்க்" டின் கிடைத்துவிடுமா— அந்நியச் செலாவணி நெருக்கடி ஒழியுமா, என்று கேட்காதீர்கள். எங்கே அரசியலையும் பொருளாதாரத்தையும் அதிகம் சொன்னால் "ஆபத்து" உண்டாகிவிடுமோ என்று கருதி, உடனேயே அழைக்கிறது மக்களை, பக்திவயல் காணச் சொல்லி!!

'பௌராணிகர்' என்பார், பக்தி வயலை உழுது உழுது, அதில் கிடைக்கும் செல்வங்களை, அளிப்பாராம் நாட்டுக்கு. ஏரோட்டும் ஏகாம்பரம், காரோட்டும் கந்தன், மளிகைக்கடை மன்னார், மருத்துவர் மாரிமுத்து, இவர்களில் யாருக்கு என்ன இலாபம், இந்த வயலால்—அவர்களுக்கு ஏனிந்த வேதாந்த விசாரணை—என்று கோபத்தோடு, நீங்கள் கேட்பது, தெரிகிறது. என்ன செய்வது? நல்வழியை ஒருசமயமும், உடனடியாகவே கேணல் வழியையும் கூறிக் கூறித் திக்குமுக்காடச் செய்யும் திருப்பணிதானே, ஆச்சாரியார் அவர்களின் திருத்தொண்டாயிருந்து வருகிறது! அவரது ஆதரவு பெற்ற ஏடுதானே அது!

ஆங்கிலம்பற்றி, குறள் தீட்டிக் காட்டுகிறார்—புதுப்பா செய்கிறார் —அதன் அருமை பெருமை பற்

### நிருபர்கள்!!

சென்னை செப். 8

சைதன்ய மடத் தலைவரான திரிதண்டி சுவாமி, இன்று இங்கு வந்தார். அவர் நிருபர்கள் கூட்டம் ஒன்று கூட்டி, அவர்களிடம் பேசினார். பல கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.



றிப் பேசுகிறார்—அந்த ஆங்கிலத்தின் மூலம் வளர்ந்துள்ள அறிவு வளர்ச்சியை ஆதாரத்துக்கு அடுக்குகிறார் — ஆனால், அந்த ஆங்கிலத்தை மூல மொழியாகக் கொண்ட மேலைநாடுகள், என்னென்ன சாதித்துள்ளன, எப்பேற்பட்ட புதுமைகளை வாரி வாரி வழங்கியுள்ளன, அந்த நாடுகளிலே 'சரஸ்வதி' இருக்கிறாளா, 'இலட்சுமி' படத்துக்குப் பூஜை நடத்துகிறார்களா என்கிற விபரத்தை மட்டும் சொல்ல மறுக்கிறார். தெரியாது என்பதல்ல; தெரியும். அதைச் சொன்னால்! பிறகு வேதாந்தம் ஏன், வேண்டாத விழாக்களேன், வீண் வம்பேன், என்று 'கேள்விகள் கிளம்பி "எங்கேயோ" இழுத்துச் சென்று விடுமே என்கிற அச்சத்தால், பேசிய பேச்சு உலருமுன்பே அழைக்கிறார் அனைவரையும் பக்தி வயலுக்கு! பாரீர், பக்தியின் பெருமையை, அறிமின் ஆன்மீக உண்மையை, கழிமின் கடவுள் திருநாமம் சொல்லி நாட்களை என்று 'பஜனை' செய்ய நாட்டை அழைக்கிறார்!!

ஆச்சாரியார் மட்டும் என்பதல்ல' அவர்போலப் புதுமைக்கும் பழைமைக்கும் இடையிலே தத்தளித்துக் கொண்டிருப்பவர்களால், எங்கே இப்படிச் சொன்னால் புதுமை வளர்ந்துவிடுமோ, அதைச்சொல்லாமல் விட்டால் நீதியை உரைக்காத பழி சாருமோ என்று அச்சத்துக்கும் ஆசைக்குமிடையிலே ஊசலாடிக்கொண்டிருப்பவர்களால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை. மின்சார விளக்கிலிருந்துகொண்டே, அகல் விளக்கின் பெருமையைச் சொல்கிறார்! வளரும் விஞ்ஞானம்பற்றி விவரித்துக்கொண்டே, வேதாந்த விசாரணைக்கு அழைக்கிறார்!!

காவியுடுத்தி, கமண்டலமேந்தி, கானகம ஏகி, "கந்தா! கடம்பா! கச்சி ஏகம்பா!", எனறு துதிப்பவர்களைப்பற்றி. ஒரே வரியில், 'அவர்கள் விருப்பம்' எனறு சொல்லிவிடலாம. இவர்கள், கந்தனையும கச்சி ஏகம்பனையும் துதிக்கத தவறுவதில்லை — காற்றில் பறக்கும் விமானத்தின் சிறப்பையும, கடுகுக்கும் நுண்ணியதான அணுவைபபற்றியும் அலசத் தயங்குவதில்லை.

ஒரு விந்தையான சேதி கேளுங்கள்—ஒருவர் உடுப்பி பெஜாவர் மடத்து அதிபதி, இன்னொருவர் கௌடியா மடத்து அதிபதி, மூன்றுமவர் சூரத் கோசுவாமி மடாதிபதி — இம்மூவரும் சென்னைக்கு வந்திருக்கிறார்கள், இந்த கிழமை. ஒவ்வொருவரும், ஒவ்வொருவகையில், பக்திமார்க்கத்திலீடுபட்டவர்கள்; மதத்தலைவர்கள். சென்னைக்கு இவர்கள் 'விஜயம்' செய்திருப்பதன் நோக்கம், இந்து மதாச்சாரத்தின் அருமை பெருமைகளைபபற்றித் தங்கள் சீடகோடிகளுக்குச் செப்பி, அதன்பெருமைகளை நிலைநாட்டுவதுதான்.

"தர்மம் என்றால் என்ன? பக்தியில் தான் இருக்கிறது, தர்மம். பக்தி என்றால் என்ன? ஆன்மாவை ஆண்டவனிடம் அர்ப்பணிப்பது. எப்படி அர்ப்பணிப்பது? ஆசைகளைத் துறந்து, இகலோக இச்சைகளை மறந்து, ஈசனையே சதா நினைப்பது."

"எத்தனை மட ஆதீனங்கள், வெவ்வேறு பெயர்களில் விளங்கினாலும், அவைகளெல்லாம் ஒரே பாதையைத்தான் காட்டுகின்றன. என்ன பாதை அது? அதுதான், ஈசன் திருவடியை அடையும் பாதை."

"சைதன்ய மகாப்பிரபு என்ன சொன்னார்? கலாச்சாரம் கலாச்சாரம் என்கிறீர்களே பாபிகளே, அது, மதத்தில்தானடா உள்ளது! மதத்தை இழந்தால் கலாச்சாரம் அழிந்துபோகும், நாசமாய்ப் போய்விடும்."

இப்படிப்பட்ட, 'அரியபெரிய புதிய கருத்துக்களை,' உதிர்த்திருக்கிறார்கள். அவர்கள் உதிர்ப்பதையும், அதை வரவேற்போர் ஏந்தி ரசிப்பதையும்பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆனால், இந்த உபன்யாசங்களை — ஆசையை அகற்று, ஆண்டவனை நினை, மதமே நல்வழி எனும் உபதேசங்களை, அவர்கள் எங்கேயிருந்து சொன்னார்கள தெரியுமோ? மடாதிபதிகள், ஆண்டவனது ஆலயங்களிலே, பூஜைகளையெல்லாம் முடித்துவிட்டு, ஆசார அனுஷ்டானம் இம்மியளவும் குறையாது, எல்லோரும் பணிந்து நின்று கேட்கும்படியான மேடையிலேயிருந்து தானே மெய்ஞ்ஞானத்தைப் போதிப்பது வழக்கம் என்று எண்ணுவீர்கள்! அப்படி அவர்கள் போதனையைத் துவங்குமுன், புண்யம்விரும்பிகள், மதத்தலைவர்களுக்குக் காணிக்கையும் கர்ப்பூர ஆராதனையும் செய்வதுகூட வழக்கம்தான்!! ஆனால், சென்னைக்குவந்துள்ள மதாச்சாரியார்கள், எங்கேயிருந்த, இந்த உபன்யாசங்களை அருளினர் தெரியுமோ? மேலைநாட்டுப் பாணியில், பலதரத்தவரும், பலமாதிரியான காரியங்களுக்கு வந்து தங்கும் விடுதியாக விளங்கும் தாசப்பிரகாஷ் ஓட்டலில்!! பொய்யல்ல, உண்மை — செப்டம்பர் ஒன்பதாம் தேதியன்று நிகழ்ந்தது. சர். சி. பி. இராமசாமி அய்யர் தலைமை வகிக்க, பக்திப்பாலம் கட்டுவதில் தனது ஈடுபாட்டை உணர்த்திக்கொள்ளத் தவறாத அமைச்சர் சுப்ரமணியம் முன்னிலையில்; சட்டசபைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணாராவ் வரவேற்க, இந்த வைபவம் நடந்திருக்கிறது. ஓட்டலுக்கு வந்திருக்கிறார்கள் மடாதிபதிகள்! அவர்களுக்குப் பூசைகள் செய்வதற்குப் பதில் பக்த கோடிகள், "வரவேற்பிதழ்கள்", வாசித்தளித்திருக்கிறார்கள்! அதற்கு, ஆங்கிலநாட்டுப்பாணியும், மிலேச்சர்கள் என்று வேதசாஸ்திரம் கூறும்வெளிநாட்டினருடன் கூடிக்குலவுவதோடு மட்டுமின்றி, அவர்தம் புதுமைகளை மனப்பூரிப்போடு ஏற்றுக்கொள்ளத் தயங்காதவருமான சர். சி. பி. இராமசாமியார் தலைமை வகித்திருக்கிறார்! அவரது தலைமையில், இந்த மதாச்சாரியார்கள், மாடிக்குமேல் மாடிகட்டும் தாசப்பிரகாஷ் ஓட்டல்காரர் சீதாராமராவ் என்பவரையும், அடுத்த தடவை டில்லி அமைச்சர் பதவி கிடைக்குமா என்று கணித்துக் கொண்டிருப்பவரையும், அவர் போட்டிருக்கும் கடுக்கன் வைரமா, இமிடேஷனா, இமிடேஷனிலும் உயர்ந்ததா மட்டமா என்று கணக்குபபோடும் குணம்கொண்ட சீமானகளையும், எதிரே வைத்துக் கொண்டு, "ஆசையை அகற்று. அதுவே நாதனை அடைய வழி" எனறு சொல்லி, அடுத்த நிமிடமே "எங்களுக்கு ஒரே ஒரு ஆசையுண்டு—அது என்னவென்

### ஒரு சித்தர்

சத்தியமின்றி, தனி ஞானமின்றி பக்தியுமின்றி, பரன்
உண்மையன்றி ஊன்பித்தேறும்
மூடர் பிராமணர்தாம் அன்றே.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண். . . . { அலுவலகம். 15 இல்லம். . . . 118

றால் மதம் தழைக்கவேண்டும். அதற்கு, அரசாங்கம், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மதத்தைப் பற்றிப் போதிக்கவேண்டும். இந்த ஆசைதான்", என்று பேசியிருக்கிறார்கள்!!

மதாச்சாரியர்கள், ஓட்டலுக்கு அழைக்கப்படுகிறார்கள் — ஓய்வு பெறும் நார்ட்டன் துரைக்கும், வெளிநாட்டிலிருந்து வந்த முகம்மது இஸ்மாயிலுக்கும் விருந்தும் வரவேற்பும் வழங்குவதுபோல— மதாசாரியர்களை, பக்தகோடிகள், பாராட்டி வரவேற்புப் பத்திரம் அளிக்கிறார்கள். இந்த மதாசாரியர்கள் வழங்கும் உபன்யாசத்துக்கும், ஒரு தலைவர் தேவைப்படுகிறார், தலைமைவகிக்க.

முறையில் ஏற்பட்டுள்ள புதுமையைக் கவனிக்கச் சொல்லவில்லை, நாம். பக்தி மார்க்கத் திருப்பணி, எந்தெந்த அளவுக்கு அவர்களை இழுத்து வருகிறது என்பதையே கவனிக்கச் சொல்லுகிறோம். இந்த இலட்சணத்தில், சங்கராச்சாரியார் ஒரு பக்கம் இருந்துகொண்டு, நாகரிக முறை கூடாது—என்னைத் தரிசிக்க வருவோர் சட்டை எதுவும் போடக்கூடாது (பெண்கள் மட்டும் விதிவிலக்கு!!!) — என்று பக்தியைப் பரப்பிக்கொண்டிருக்கிறார். அவரைப்போலவே, பக்தி மார்க்கத் தலைவர்கள் தாம் இவர்களும். உபன்யாசம், ஆலயத்தைவிட்டு, ஓட்டலுக்கு வருகிறது! பாதபூஜை செய்ததுபோய், பக்தர்கள், வரவேற்புப்பத்திரம் வழங்குகிறார்கள்!!

இதையும்விட ஒரு விநோதமான சேதி 9—9—58 தினமணி இதழின் கடைசிப் பக்கத்தில் கண்டிருக்கக்கூடும். திருவாவடுதுறை பண்டாரசன்னதிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார் ஒரு தம்பிரான்! பண்டார சன்னதி இடத்தில் வரவேண்டிய அளவுக்கு மார்க்கத்துறையையும், ஆசையை விடு, ஆன்மாவை ஐயனிடம்சேர்என்று போதிக்கவேண்டிய பொறுப்பையும் பெற்ற காவிகட்டிதான், அந்தத்தம்பிரான் என்பவரும்! அவர்வழக்குப்போட்டார், என்ன வழக்கு தெரியுமா? "1929-வாக்கில் ஆதின வழக்கப்படிதாம் தம்பிரானானதாகவும், பண்டார சந்நதி ஒதுக்கிய பணிகளைத் தாம் செய்து வந்ததாகவும், 1944-ல் தாம் மடத்திலிருந்து விரட்டப்பட்டதாகவும், அதுமுதல் தாம் மடத்தில் சேர்க்கப்படவில்லை என்றும், எனவே வழக்கப்படியும் ஆதீன பட்ஜெட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடியும் தமக்கு வாழ்க்கைப் பணமும், படிகளும் பண்டார சந்நிதி கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்றும், எனவே பண்டார சன்னிதி தமக்கு ரூ. 12,000மும் 1934 ஜூலை முதல் அதற்கு வட்டியும், எதிர்காலத்தில் வாழ்க்கைப் பணமாக மாதம் ரூ. 125ம் தரவேண்டும்" என்று வழக்குத் தொடர்ந்து, கீழ் மன்றத்திலிருந்து, உயர்நீதி மன்றம் வரைக்கும் வந்து தள்ளுபடியாகி இருக்கிறது.

தம்பிரான்! அதாவது சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் இப்போதிருக்கிற பண்டார சந்நிதியின் இடத்தில் வரவேண்டியவர்! அப்படி வந்திருந்தால், அமைச்சர் பக்தவத்சலம்முதல்சாதாரண அன்னக்காவடி வரையில் அவரைப்போய் தரிசித்து ஆசையை எப்படி அகற்றி முக்திமார்க்கம் தேடுவது என்று விளக்கம் கேட்கும் இடத்தில் இருக்கவேண்டியவர்! எல்லோராலும், புனிதர், ஈசனுக்கு அடுத்த இடத்தில் இருப்பவர், மதக்காவலர், என்று கும்பிட வேண்டிய அருகதையைப் பெற வேண்டியவர். மும்மலம் நீக்கி, முக்தி மார்க்கம் ஒன்றே தன் வழியெனக் கொண்டு தம்பிரான் ஆனவர்! அவர், கேவலம் அஞ்ஞானிகள் ஆசைப்படும் பணத்திற்காக, உலக பந்தம் துறக்காத நீதிபதிகள் எனும் சடலங்களை நாடி வழக்குப் போடுகிறார் — கூண்டிலேறி, "உரிமைக்கிளர்ச்சி" செய்திருக்கிறார்!!

கடவுளைக் காட்டுவோர்—மதாச்சாரியார்கள்—இந்துமதக் காவலர்கள் என்பவர்களின் யோக்கியதை இது.

"கையொன்று செய்ய
விழியொன்று நாட
கருத்தொன்று எண்ண,
வஞ்சநாவொன்று பேச
மெய்யொன்று சார
செவியொன்று கேட்க
விரும்பி யான்
செய்கின்ற பூசை,
எவ்வாறு கொள்வாய்
வினை தீர்த்தவனே!"

என்று பட்டினத்தார், பாடினாராம். பூசை செய்வோருக்கு வழிகாட்டும் மதகுருமார்கள் நிலை, இது! அப்படிப்பட்டவர்கள் நிரம்பி வழியும், பக்தி வயலின் பெருமையைக் காண அழைக்கிறது, கல்கி!!

★

## எது கடவுள்?

புது டில்லி செப். 8

அமெரிக்க "டைம்" பத்திரிகைக்கு மொரார்ஜி தேசாய் அளித்த பேட்டியில் "நேருவுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை" என்று கூறியது பற்றி மேல் சபையில் ஒருவர் கேள்வி கேட்டார்.

"கடவுளைப்பற்றி, நீங்கள் கூறும் விளக்கத்தைப் பொறுத்திருக்கிறது" என்று நேரு பதிலளித்தார்.